# சூர்மை

## பொருளியல் சஞ்சிகை

இதழ் - 27

பொருளியல் துறை
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**Advisor**

Dr.S. Jeyarajah
Head, Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editor**

Miss. G. Kajenthini
Lecturer (Probationary),
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editorial Team**

Mr. A. Soundaralingam
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Dr. T. Bhavan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. S. Maheswaranathan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr. K. Pushpakaran
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. J.Suresh,
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

*Coormai*

*Issue:27*

*April-2018*

***Publisher***

***Department of Economics,***
***Faculty of Commerce and Management,***
***Eastern University,***
***Sri Lanka***

***T. No: 065 2240735***



## கூர்மையின் வாசகர்களே..

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கற்கையை நோக்காகக் கொண்டு சிறப்பு இதழாக வெளிவரும் இச்சஞ்சிகையானது கட்டுரைகள், எண்ணக்கரு விளக்கங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளிட்ட பல விடயங்களை தாங்கிய இதழாக இவ்வாண்டிலும் வெளிவருகின்றது.

இச்சஞ்சிகை பொருளியலை ஒரு பாடமாகக் கற்க்கும் மாணவர்களுக்கு மாத்திரமின்றி பொருளியலைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

கூர்மையின் இவ்விதழ் வெளிவருவதற்கு பங்களித்த அனைத்து நபர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், வாசகர்களாகிய உங்களிடமிருந்து கூர்மை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தை எதிர்பார்ப்பதோடு, எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது வெளிவருவதற்கு தங்கள் ஆதரவினை வேண்டிநிற்கின்றேன்.

நன்றி

ஆசிரியர்,

கூர்மை

இச்சஞ்சிகையில் இடம்பெறுகின்ற கட்டுரைகள் மற்றும் எண்ணக்கரு விளக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அனைத்து கருத்துக்களுக்கும் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாகும்.

# பிராந்திய அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவும் அதன் அளவீடும்

கோ.பிறேமலா, ச.மகேஸ்வரநாதன்[2]
[2] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிமுகம்

பிராந்தியம் என்பது பௌதீக பண்புகளின் அடிப்படையிலும், மனித மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பில் பரந்துபட்ட பகுதிகளாக பிரிக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இடம் சார்ந்த அளவுகோலை அடிப்படையாக கொண்டதாகும். அபிவிருத்தியை அளவிடுவதற்கு நாட்டின் ஒரு பகுதியை ஆய்வாக எடுப்பது பிராந்தியம் ஆகும். அதாவது ஒட்டு மொத்தமாக அல்லது முழுமையாக குறிப்பிட்ட பிராந்தியங்களுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு பிராந்தியம் உதவுகிறது. இவ்வாறு நாட்டின் பகுதிகளை ஒப்பிட்டு பார்ப்பதற்கு சிறு சிறு பகுதிகளாக/ பிராந்தியமாக கணப்பட்டால் இலகுவாக இருக்கும். பிராந்திய திட்டமிடல்கள் பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான வடிவமாக காணப்படுகின்றது (Glasson 1974). Friedman (1970) பிராந்திய அபிவிருத்தி பொருளாதார வளர்ச்சியின் சம்பவம் என்றும் பிராந்தியமானது வருமானம், வேலைவாய்ப்பு, சமூக நலன்களை அனுபவிப்பதற்காக சிறு பகுதிகளான ஒரு அமைவிடமாக காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். சமூக பொருளாதார குறிகாட்டிகளின் அடிப்படையில் ஒரு பகுதியை மற்ற பகுதியோடு ஒப்பிட்டு பார்த்தலுக்கு அவசியமானதாக பிராந்தியம் காணப்படுகின்றது.

1950 களில் பிராந்திய அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்றது எனலாம். இக் காலப்பகுதியில் பிராந்தியங்களில் நிறுவனம் என்ன செய்யவேண்டும், வேலைவாய்ப்பு, இலாபம், உள்நாட்டு உற்பத்தி (GDP), பொருளாதார வளர்ச்சி போன்ற பொருளாதார குறிகாட்டிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை பற்றிய அடித்தளமாக பிராந்திய அபிவிருத்தி காணப்படுகின்றது.

20ஆம் நூற்றாண்டில் பல்துறை சார்ந்த அணுகுமுறையாக நோக்கப்பட்டது. அதாவது அரசியல், பொதுக்கொள்கை, சமூகவியல் இவையுடன் சேர்ந்து எவ்வாறு பொருளாதாரத்தை வடிவமைக்க வேண்டும் என்பது பற்றியதாக காணப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் பொருளாதாரப் புவியியல் இணைந்துகொண்டதன் பிற்பாடு பிராந்திய அபிவிருத்தி பிரதேசங்களின் இடம் சார்ந்த அபிவிருத்தியாக காணப்பட்டது. ஏனெனில் இடம் தான் மக்கள் வசிப்பதற்கும், வேலை செய்வதற்கும், முதலிடுவதற்குமாக காணப்பட்டது. இவ்வாறு இருக்கையிலே பிராந்திய அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட்டது. அதாவது சிறிய கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டதுடன் நிறுவனங்களின் ஊடாகவும் பிராந்திய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. அத்தோடு மக்களுடைய அறிவினை எங்கே எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பிராந்திய அபிவிருத்தி பற்றிய ஆய்விற்கு/ கற்கைக்கு முக்கியமாக காணப்படுகின்றது.

பிராந்திய அபிவிருத்தி என்பது ஒரு பரந்துபட்ட எண்ணக்கருவாக காணப்படுகின்றது. இதனை பொருளாதார நடவடிக்கையின் மூலம் பிராந்திய ஏற்றத் தாழ்வை குறைப்பதற்கான முயற்சியாகவும் பார்க்க முடியும்.

உதாரணமாக வேலைவாய்ப்பினை குறிப்பிடலாம் இதனால் வருமானம் உயர்த்தப்பட்டு வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து பிராந்திய ஏற்றத்தாழ்வு குறைக்கப்படலாம். ஆனால் ஆரம்பத்தில் பிராந்திய அபிவிருத்திக் கொள்கைகள் பரந்தளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, முதலீடுகளை கவர்ந்திழுப்பதாக காணப்பட்டாலும் பிராந்திய சமத்துவத்தினை ஏற்படுத்துவதில் தவறவிட்டது. பொது நிதியியல் சில பிரதேசங்களை நோக்கியதாகவே காணப்பட்டது. அதாவது சமூக ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டது எனலாம்.

அபிவிருத்தி என்பது காலத்திற்கு காலம் மாறுபட்ட கருத்தைக்கொண்டதாக காணப்படுகின்றது. அதாவது வெவ்வேறுபட்ட மக்களிடையே வெவ்வேறு பட்ட கருத்தில் நோக்கப்படுகின்றது. சிலர் வருமானத்ததில் ஏற்படும் அதிகரிப்புதான் அபிவிருத்தி என்றும் இன்னும் சிலர் வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் மகிழ்ச்சியில் வாழ்வின் தரம் மற்றும் தங்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் அபிவிருத்தியென்றும் கருதுகின்றனர்.

அபிவிருத்தி என்பது வளர்ச்சியின் செயற்பாடாகவும் பிராந்திய வளங்களை முழு உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடியதாக காணப்பட வேண்டும். வேறு வகையில் கூறினால் அபிவிருத்தியானது பாரம்பரிய சமூக பொருளாதாரங்களை நவீன சமூக பொருளாதார நிலைக்கு மாற்றுதல் ஆகும். அபிவிருத்தியானது நேரடியாக நாட்டினை கட்டியெழுப்புவதுடனும், சமூக பொருளாதார நிலையினை மாற்றுவது தொடர்பான செயற்பாடாகவும் காணப்படுகின்றது. அபிவிருத்தி திட்டங்கள் பொருளாதார வளர்ச்சி, சமூககட்டமைப்பு மாற்றம் ஆகிய இரு நோக்கங்களை அடிப்படையாக கொண்டதாகும்.

## அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு

அபிவிருத்தியென்பது ஒரு பல் பரிமாண செயல்முறையாகும். எனவே அபிவிருத்தியென்பதற்கு பல விளக்கங்கள் காணப்படுகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்க விளக்கங்களை பின்வருமாறு குறிப்பிடலாம். Brookfield (1975) "ஒன்றில் ஒன்று தங்கியிருப்பது அபிவிருத்தி" என்றும் றொபேர்ட் Robert (1978) "விவசாயிகளின் நகரம்" , Mabogunje (1980) " அபிவிருத்தி ஒரு இடம் சார்ந்த செயற்பாடு" என்றும் Chisholm (1982) "நவீன உலக அபிவிருத்தி புவியியல் சார்ந்ததாகும்". Harrish (1982) என்பவர் "கிராமிய அபிவிருத்தி நவீன விவசாயமாக மாற்றுதல் என்றும்" Lipton (1977) "அபிவிருத்தி என்பது நவீனத்துவத்தின் கட்டமைப்பு மாற்றம் ஆகும்" என்றும் பொருளாதார காரணிகளை அடிப்படையாக கொண்டவர்களில் றொஸ்டோ (W.W Rostow) என்பவர் அபிவிருத்தி என்பது அரசியல், சமூகவியல், என்பவற்றை விடப் பொருளியல் துறையிலேயே அதிகம் பேசப்படுகின்றது என்று விளக்கமளித்ததுடன் மூலதனம், சனத்தொகை, தொழில்நுட்பம், மூலவளம் ஆகிய நான்கு காரணிகளும் ஒருங்கே இணையும்போது அபிவிருத்தியின் வளர்ச்சிக்கட்டம் ஏற்படுகின்றது என்கின்றார். இதனை பின்வரும் வரைபடம் ஒன்றின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

கிண்டல் பேர்கர் என்பவர் பொருளாதார அபிவிருத்தியென்பது உற்பத்தி அதிகரிப்பும் அந்த உற்பத்தி அதிகரிப்பிற்கு தூண்டுகோலாய் அமைந்த தொழில் நுட்பங்களினதும், நிறுவன அமைப்புக்களினதும் முன்னேற்றங்களுமாகும் என்கின்றார். அந்தவகையில் அபிவிருத்தியின் மூலமாக தகவல்

தொழில்நுட்பத்தை முதன்மைப் படுத்தியுள்ளார். பின் வந்த பொருளியலறிஞரான டட்லி சியர்ஸ் அபிவிருத்தியை வருமான ஏற்றத்தாழ்வோடு தொடர்புபடுத்தி நோக்கினார். அதாவது அபிவிருத்தியென்பது "ஒரு நாட்டில் வறுமை ஒழிக்கப்பட்டு போதியளவு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடியதாக இருப்பதும் வருமான ஏற்றத்தாழ்வு குறைந்து காணப்படுவதும் ஆகும்" என விளக்கியுள்ளார்.

வரைபடம்: 01




மூலம்: சிந்துஜா (2011)

மியர் எனும் அறிஞர் "நாட்டின் தொடர்ச்சியான தேசிய தேறிய உற்பத்தியே அபிவிருத்தி எனக் குறிப்பிட்டார். ஆனால் இத் தேசிய உற்பத்தியைக்கொண்டு அபிவிருத்தியை அளவிடுவது சரியான முடிவினை தராது என பல விமர்சனங்களும் தோற்றம் பெற்றுள்ளன. ஏனெனில் இங்கு முழு நாட்டின் உற்பத்தி அதிகரிப்பு கவனத்தில் கொள்ளப்பட்டதே தவிர தனிப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**பிராந்திய அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு**

பிராந்திய அபிவிருத்தி எனும் எண்ணக்கருவிற்கு 1970 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. எனினும் ஒரு சில அறிஞர்களால் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. மிர்தால் என்பவர் 1957 ஆம் ஆண்டு பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட்டால் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைகளை இடம் சார்ந்ததாக விளக்குவதே பிரதேச அபிவிருத்தியாகும். அதாவது அபிவிருத்திச் செயன்முறைகளையும் அதன் பண்புகளையும் இடம் சார்ந்ததாக அல்லது பிரதேசம் சார்ந்ததாக விளக்குவதாகும் (சிந்துஜா, 2011)

பிராந்திய மக்களின் வாழ்வாதார மட்டங்களை மேம்படுத்துவதும் அவர்களின் பொதுவான மனித நலனை அதிகரிக்கச் செய்வதும் ஆகும். மாற்றம் மட்டும் அபிவிருத்தி இல்லை சிறந்ததிற்கான மாற்றமாக காணப்படுதல் ஆகும். உதாரணமாக தாவரம் மரமாவதிலையோ பிள்ளை வயது வந்தவர்களாக மாறுவதிலையோ எந்த மாற்றமும் இல்லை. பொருளாதார வளர்ச்சியானது வெளியீட்டின் வளர்ச்சியினூடாகவும் நாட்டின் வருமானத்தினூடாகவும் பிரதிபலிக்கின்றது. அதாவது பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோள் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதாகும். அபிவிருத்தியானது எல்லா பிராந்தியங்களுக்கிடையேயும் சமனாக காணப்படுவதில்லை. ஏனெனில் அபிவிருத்திச் செயன்முறை சில பிராந்தியங்களில் அதிகமாகவும் சில பிராந்தியங்களில் குறைவாகவும் காணப்படலாம். இது ஏனைய பிராந்தியங்களை விட குறித்த பிராந்தியத்தை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன்

பிராந்தியங்களுக்கிடையில் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிவகுக்கின்றது. ஏனெனில் இத்தகைய நிலையானது அபிவிருத்தியின் குறிகாட்டிகளினால் இயங்குகின்றது.

பிராந்திய அபிவிருத்தியானது குறிப்பிட்ட பிராந்தியங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள்ளார்ந்த பிராந்திய அபிவிருத்தி வடிவமைப்பு என விளக்கப்படுகின்றது. இதன் அணுகுமுறையானது பல்துறை சார் அணுகுமுறையாக காணப்படுகின்றது. பிராந்திய அபிவிருத்தியின் முதலாவது கருத்தானது பொருளாதாரத்தின் வளர்ச்சியின் அளவு மற்று உற்பத்திக் கட்டமைப்பின் வேறுபாடாக காணப்படுகின்றது. வருமான வேலைவாய்ப்பானது அபிவிருத்தியின் வேறுபாட்டினை தெரிந்து கொள்வதற்கு அளவிடப்படுவதாக காணப்படுகின்றது. இந் செயற்பாடானது நாட்டிலும் நாட்டின் துணை பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. மேலும் பிராந்திய அபிவிருத்திக் கருத்தானது திட்டம், கொள்கைகள், சமநிலையான அபிவிருத்தியுடன் தொடர்புடையதாக கணப்படுகின்றது. பிராந்திய அபிவிருத்திக் கொள்கைகளானது பிராந்திய ஏற்றத்தாழ்வைக் குறைத்தல், பிராந்தியத்தின் முழு வளர்ச்சினை சாத்தியமாக்குவதனையும் நோக்கமாக கொண்டவையாகும். பொருளாதார திட்டமிடலாளர்கள் துறைரீதியான கோணங்களிலிருந்து பிராந்திய அபிவிருத்தி பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றார்கள்.

சமநிலையான அபிவிருத்தியானது எல்லா பிராந்தியங்களிலும் சமமான அபிவிருத்தியினை குறிப்பதாக காணப்படுகின்றதில்லை. அதன் திறனானது ஒரு பகுதியின் முழுமையான அபிவிருத்திக்கான சாத்தியப்பாட்டினையே குறிக்கின்றது. ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சின் நன்மைகள் மக்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. எனினும்

ஒவ்வொரு பிராந்தியத்திலும் தன்னிறைவடைவதனை சமநிலையான அபிவிருத்தி கருதுவதில்லை. இந்தியா போன்ற நாடுகளின் பின்தங்கிய விளைவுகளை குறைப்பதற்கு, பொருளாதாரத்தை சீரான முறையில் அபிவிருத்தி செய்ய, வளங்களை விருத்தி செய்யவும் பாதுகாக்கவும், நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கவும், சமூக தீமைகளை விலக்கி சமூகத்தை மேம்படுத்தவும், பெரியளவிலான வேலை வாய்ப்புக்களை பெறுதல், சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை ஏற்படுத்தல் போன்றவைகளை முக்கியமான கொள்கை நோக்கங்களாக கொண்டுள்ளது. அதாவது பிராந்தியங்களுக்கிடையில் மூலதன தலா வருமானம், வேலைவாய்ப்பு முறை, மற்றும் வாழ்க்கைத்தரத்தின் நிலையான செலவினங்கள், சேமிப்பின் விரிவாக்கம், மூலதன உருவாக்க விகிதம், உற்பத்தித் துறையின் வளர்ச்சி வீதம், கல்வி மற்றும் சமூக முன்னேற்றங்கள் என்பன வேறுபட்டு காணப்படுகின்றன.

எனவே பிராந்திய அபிவிருத்தியின் நோக்கமானது பிராந்தியங்களுக்கிடையிலான அபிவிருத்தி, வளக்கிடைப்பனவு, பொருளாதார கட்டமைப்பு, சமூக மாற்றம் ஆகிய வேறுபாடுகளை குறைத்தலாகும். இத்தகைய வேறுபாடுகள் பொதுவாக கைத்தொழில் கட்டமைப்பு, உட்கட்டமைப்பு வசதி, அவற்றை அணுகக்கூடிய தன்மையில் காணப்படுகின்றன. ஆய்வாளர்களின் நோக்கமாக சிறிய பிரதேசங்களுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இடையிலான வேறுபாட்டுக்கான காரணிகளை கண்டறிந்து குறைத்தலாகும்.

வரலாற்று ரீதியான திட்டமிடல்கள் சமூக மற்றும் பொருளாதார காரணிகளை விட நிருவாகம் மற்றும் அரசியலுடன் தொடர்பு பட்டதாக காணப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் பிராந்திய திட்டமிடல்களின் கருத்தானது வளர்ந்து வருகின்ற நாடுகளில்

முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. ஏனெனில் ஒவ்வொரு பிராத்தியத்திற்கும் அபிவிருத்திக்கான சாத்தியப்பாடுகள் மற்று தந்திரோபாயங்களை கொண்டு வருவதற்கும், ஒவ்வொரு பிராந்தியத்திலும் மனித மற்றும் பொருள் வளங்களை கருத்தில் கொள்வதற்கும், உள் துறைசாரந்த பிரச்சினைகளையும் பிரதேச கற்கைகளினையும் கருத்தில் கொள்வதற்கும் ஆகும். இவ்வாறு திட்டமிடல்கள் உரிவாறு கையாளப்பட்டால் மனிதர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்குவதற்கான வினைத்திறனான கருவியாக காணப்படும். Christaller, Philbrick, Dickension என்பவர்கள் பிராந்திய அபிவிருந்தியுடன் இடம் மற்றும் பிராந்தியங்களின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**பிராந்திய அபிவிருத்தியின் நோக்கங்கள்**

1. பொருளாதார அபிவிருத்தியினை அடைந்து கொள்ளல்
2. வறுமையயை இல்லாதொழித்தல்
3. வேலையின்மையை குறைத்தல்/ இல்லாதொழித்தல்
4. உள்நாட்டு சேமிப்பினூடாக முதலீட்டை ஊக்குவித்தல்
5. சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்
6. வெளிநாட்டு உதவிகளை அதிகரித்தல்
7. பரஸ்பர வர்த்தகத்தை அதிகரித்தல்
8. வளமான மானிட வளத்தை உறுதிப்படுத்த வேண்டும்
9. வினைத்திறனானதும் விளை திறனானதுமான காப்புறுதி திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

**அபிவிருத்தியை அளவிடுதல்**

**அபிவிருத்திக் குறிகாட்டிகள் (Parameters of Development)**

அபிவிருத்தி அளவீடு என்பது உலக நாடுகளின் பல்துறை வளர்ச்சிகளின் தராதரங்களை அறிந்து கொள்வதற்கும், எதிர்காலத்தில் அந்நாடுகளின் உயர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எடுக்கப்படும் ஒரு மதிப்பீட்டு முயற்சி எனப்படுகின்றது. இன்னொருவகையில் கூறினால் அபிவிருத்தியின் தன்மைகளை அறிய மேற்கொள்ளப்படும் ஒரு மதிப்பீடு எனவும் கூறப்படுகின்றது (Hamzaa 1995).

ஒரு நாடு பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் கூடிய அபிவிருத்தியை பெற்றுள்ளதா அன்றேல் குறைந்த அபிவிருத்தியை பெற்றுள்ளதா என அறிவதற்கும் முடிவுகளை எடுப்பதற்கு துணையாகும் ஒரு மதிப்பீட்டுக் கருவி அபிவிருத்தி அளவீடு ஆகும். இன்று உலக நாடுகளின் நிலைமைகளைப் பொதுவாகவும் ஒப்பீட்டு ரீதியிலும் அறிந்து கொள்வதற்கு அபிவிருத்தி அளவீடு மிக அவசியமாக உள்ளது.

நாடுகளின் அபிவிருத்தித் துறைகளில் எந்த பிரிவுகள் பின்தங்கியுள்ளன, எந்த பிரிவுகளை முன்னேற்ற வேண்டும், எந்த பிரிவுகளை முன்னேற்றலாம் என அறிந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுவது அபிவிருத்தி அளவீட்டின் மற்றுமொரு நோக்கம் எனவும் கருதப்படுகின்றது (Hamzaa 1995)

இயற்கைச் சூழல், தொழில்நுட்பம் மற்றும் நிறுவனம் என்பன பொருளாதார அபிவிருத்தியின் மூன்று அடிப்படைக் குறிகாட்டிகளாகும். இவைகள் அபிவிருத்தியில் வரையறுக்கப்பட்டவைகளாக காணப்படுகின்றன. உதாரணமாக பள்ளத்தாக்குகளில் விவசாயம், காடுகளில் மரம்வெட்டுதல், கடலோர பகுதிகளில் மீன் பிடித்தல் போன்ற முக்கிய பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடலாம். மேலும் இந் நடவடிக்கையிலுள்ள உற்பத்திகளின் அளவானது மக்களுக்கு கிடைக்ககூடிய தொழில்நுட்பத்தின் அளவால் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. தொழில்நுட்பமானது மனிதர்கள் இயற்கை சூழலுடன் தொடர்பு கொள்வதற்கான கருவியாகும். பழைமையான தொழில்நுட்பம் இயற்கையின் அளவு, அவர்களின் வருமானத்தை கருத்தில் கொள்வதில்லை.

பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிப்பதற்காக மனிதர்களால் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் இவ் நிறுவனங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. இவ்வாறு பொருளாதார அபிவிருத்தியின் நிலையானது இயற்கைச்சூழல் தொழில்நுட்பத்திற்கும் பிராந்தியத்தில் உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் இடையிலான இணக்கப்பாட்டின் தொழில்பாடாகும்.

## பிராந்திய அபிவிருத்தியின் அளவீடு (Measurement of Regional Development)

அபிவிருத்தி சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பம் முதலே அபிவிருத்தியை அளவிடுதலும் தொடங்கியது. ஆரம்பத்தில் பொருளியல் துறை மூலமும் பின்னர் ஏனைய விடயத் துறைகள் அடிப்படையிலும் அபிவிருத்தியை அளவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட

பிரயத்தனங்களின் பின்னணியில் அபிவிருத்தி அளவீட்டு முறைகளை பின்வருமாறு பிரிக்கலாம்.

1) **பொருளாதாரக் குறிகாட்டிகள்**
- மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தி/ வருமானம்
- மொத்த மெய் தேசிய உற்பத்தி/ வருமானம்
- தலாவருமானம் / வருமானம்
- பணவீக்க வீதம்

2) **சமூக நலக் குறிகாட்டிகள்**
- பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (PQLI)
  - எழுத்தறிவு வீதம்
  - சிசு மரண வீதம்
  - பிறப்பிலிருந்து எதிர்பார்க்கும் ஆயுள் காலம்
- மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI)
  - பிறப்பிலிருந்து எதிர்பார்க்கும் ஆயுள் காலம்
  - கல்வியறிவு மட்டம்
  - கொள்வனவுச் சக்தியினை அடிப்படையாகக் கொண்ட தலா தேசிய உற்பத்தி
- மனித வறுமைக் குறிகாட்டி (HPI)
- வேலையின்மை வீதம்
- லோறன்ஸ் வளையி மற்றும் கினிக்குணகம் (வருமான சமமின்மை)
- மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கை
- ஓர் வைத்தியருக்கான நோயாளிகளின் எண்ணிக்கை
- நாளொன்றுக்கு உட்கொள்ளும் கலோரிகளின் அளவு
- குடிநீர் வசதிகள்

- வீட்டு வசதிகள்
- பொழுது போக்கு
- போக்குவரத்துச் சாதனம்

***உசாத்துணை***


*Brookfield, H.C., 1975. Multum in Parvo: questions about diversity and diversification in small developing*

*countries. In Development Policy in Small Countries (pp. 54-76). Croom Helm London.*

*Mabogunje, A., 2015. The development process: A spatial perspective. Routledge.*

*Rostow, W.W. and Rostow, W.W., 1990. The stages of economic growth: A non-communist manifesto. Cambridge university press.*

*Chisholm, M., 1982. Modern world development: a geographical perspective. Rowman & Littlefield.Lipton, M., 1977. Why poor people stay poor: a study of urban bias in world development. London: Canberra: Temple Smith; Australian National University Press.*

*பவானி (2014), "திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி நிலமை பற்றிய ஆய்வு"இ கிழக்குப் பல்கலைக்கழகம்.*

*Sinthuja.S, (2011), "An analysis on use of Information Technology in Manmunai north D.S divition ", Eastern University of Sri Lanka*

## Government Investment in Infrastructure

| Year | Economic Services | | Social Services | | Total | |
|---|---|---|---|---|---|---|
| | Rs. billion | As a % of GDP | Rs. billion | As a % of GDP | Rs. billion | As a % of GDP |
| 2013 | 369.4 | 3.9 | 77.6 | 0.8 | 447.0 | 4.7 |
| 2014 | 330.1 | 3.2 | 112.3 | 1.1 | 442.5 | 4.3 |
| 2015 | 429.0 | 3.9 | 124.4 | 1.1 | 553.4 | 5.1 |
| 2016 | 424.0 | 3.6 | 117.3 | 1.0 | 541.3 | 4.5 |
| 2017 (a) | 474.1 | 3.6 | 135.3 | 1.0 | 609.4 | 4.6 |

Source: Central Bank Report, Sri Lanka (2017)

| இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தில் வேலையின்மை மற்றும் பணவீக்கதின் போக்கு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | பொருளாதார வளர்ச்சி வீதம் | பணவீக்க வீதம் | வேலையின்மை வீதம் |
| 1990 | 6.4 | 21.5 | 15.9 |
| 1991 | 4.6 | 12.2 | 14.7 |
| 1992 | 4.4 | 11.4 | 14.2 |
| 1993 | 6.9 | 11.7 | 13.8 |
| 1994 | 5.6 | 8.4 | 13.0 |
| 1995 | 5.5 | 7.7 | 12.3 |
| 1996 | 3.8 | 15.9 | 11.4 |
| 1997 | 6.4 | 9.6 | 10.6 |
| 1998 | 4.7 | 9.4 | 9.2 |
| 1999 | 4.3 | 4.7 | 8.9 |
| 2000 | 6.0 | 6.2 | 7.7 |
| 2001 | -1.5 | 14.2 | 7.9 |
| 2002 | 4.0 | 9.6 | 8.8 |
| 2003 | 5.9 | 6.3 | 8.2 |
| 2004 | 5.4 | 7.6 | 8.4 |
| 2005 | 6.2 | 11.6 | 7.7 |
| 2006 | 7.7 | 10.0 | 6.5 |
| 2007 | 6.8 | 15.8 | 6.0 |
| 2008 | 6.0 | 22.6 | 5.2 |
| 2009 | 3.5 | 3.5 | 5.8 |
| 2010 | 8.0 | 6.2 | 4.9 |
| 2011 | 8.4 | 6.7 | 4.1 |
| 2012 | 9.1 | 7.5 | 3.9 |
| 2013 | 3.4 | 6.9 | 4.4 |
| 2014 | 5.0 | 2.8 | 4.4 |
| 2015 | 4.8 | 2.2 | 4.7 |
| 2016 | 4.4 | 4.0 | 4.4 |
| 2017 | 3.1 | 7.7 | 4.2 |

**Source: Source: World Bank Database**

# பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற சாதகமான பாதகமான விளைவுகள்: இலங்கை குறித்த ஒரு பார்வை


ச.சியாளினி[1] ரூ கலாநிதி ரி. பவன்[2]

[1]உதவி விரிவுரையாளர், பொருளியல் கற்கைகள் அலகு,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

[2] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை


குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டில் பொதுமக்களிடம் புழக்கத்திலுள்ள மொத்த பணத்தின் அளவே பணநிரம்பல் எனப்படும். இங்கு பொதுமக்கள் என்பது நாட்டு மக்கள், கம்பனிகள், அரசகூட்டுத்தாபனங்கள், ஏனைய சங்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கும். வேறுவகையில் கூறின், ஒரு நாட்டில் அரசு, வங்கி அமைப்புக்கள் தவிர்ந்த நிறுவனங்களிடமும் அவர்கள் சார்ந்த பொது மக்களிடமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக தயாராக உள்ள மொத்த பணத்தின் அளவே பணநிரம்பலாகும். பணநிரம்பலானது ஒரு இருப்பு மாறியாகும்.

பொதுமக்களிடம் செலவிடக்கூடிய வடிவில் இருக்கும் பண இருப்புக்களைப் பணநிரம்பலானது குறிக்கிறது. செலவிடக்கூடிய வடிவில் இருக்கும் பணஇருப்புக்கள் என்பது ஆரம்பத்தில் தாள் உலோக நாணயங்களையும், கேள்வி வைப்புக்களையும் பணநிரம்பலின் பிரதான பகுதிகளாகக் கொண்டிருந்தது. ஆனால் வளர்ந்துவரும் வங்கித் தொழிலும் பணப் பொருளாதாரமும் இன்று கால, நிலையான, சேமிப்பு வைப்புக்களையும் பணநிரம்பலின் ஒரு பகுதியாகக் கொண்டு வரையறுக்கிறது. அந்தவகையில் பணம் என்பதற்குள் உள்ளடக்கப்படும் சொத்துக்களின் திரவத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பணநிரம்பலானது மிகக் குறுகிய பணநிரம்பல் ($M_0$), குறுகிய பணநிரம்பல் ($M_1$), விரிந்த பணநிரம்பல்

($M_2$), ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$), அதிவிரிந்த பணநிரம்பல் ($M_4$), மிகவிரிந்த பணநிரம்பல் ($M_5$) என்றவாறாக வகைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் தற்போது வணிக வங்கிகளில் வெளிநாட்டவரின் பெயரில் காணப்படும் வைப்புக்களும் பணநிரம்பலின் ஓர் பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே பணநிரம்பல் என்பது ஓர் நாட்டில் பொதுமக்களிடம் உள்ள தாள், உலோக நாணயங்களும், அவர்களின் பெயரிலும் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் பெயரிலும் வணிக வங்கிகளில் காணப்படும் கேள்வி, நிலையான, சேமிப்பு வைப்புக்களையும், வணிக வங்கிகளில் வெளிநாட்டவரின் பெயரிலுள்ள வைப்புக்களினதும் மொத்தத் தொகை பணநிரம்பல் ஆகும்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பணநிரம்பல் வகைப்பாடுகளாக $M_1$, $M_2$, $M_{2b}$, $M_4$ என்பன காணப்படுகின்றன. இதில் $M_1$ எனப்படுகின்ற குறுகிய பணநிரம்பலானது பொது மக்கள் வசமுள்ள தாள் உலோக நாணயங்களுடன் வணிக வங்கிகளில் பொதுமக்களின் பெயரில் பேணப்படுகின்ற கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது ($M_1$ = கையிலுள்ள தாள் குற்றி நாணயங்கள் + கேள்வி வைப்புக்கள்).

அதைத்தொடர்ந்து அறிமுகம் செய்யப்பட்ட $M_2$ எனப்படுகின்ற விரிந்த பணநிரம்பலானது குறுகிய பணநிரம்பல் $M_1$ உடன் வணிக வங்கிகளில் பொதுமக்களின் பெயரில் வைப்புச் செய்யப்படுகின்ற தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது ($M_2$ = $M_1$ + சேமிப்பு வைப்புக்கள் + தவணை வைப்புக்கள்).

இலங்கையின் பணநிரம்பலில் 1998 ஜனவரி மாதத்திலிருந்து $M_2$ பனநிரம்பலின் மற்றுமொரு விரிவாக்கமாக $M_{2b}$ ஆனது அறிமுகம்செய்து வைக்கப்பட்டது. சீராக்கம்செய்யப்பட்ட விரிந்த பணநிரம்பலான $M_{2b}$ ஆனது வங்கிகளில் அந்நியச் செலாவணி வடிவில் வைப்புச்செய்யப்படுகின்ற வெளிநாட்டு வங்கிப் பிரிவுகளும் முக்கியம்பெறத் தொடங்கியதைத் தொடர்ந்து அறிமுகம்செய்து வைக்கப்பட்ட பணநிரம்பல் வகைப்பாடாகும். இது $M_2$ உடன் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களையும் ($TSD_{NRFC}$), வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவிலுள்ள உள்நாட்டவரின் வைப்புக்கள் அல்லது வதிவுள்ளோரின் வைப்புக்களையும் ($RD_{FCBU}$) உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது ($M_{2b} = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$).

மேலும் $M_4$ எனப்படுகின்ற அதிவிரிந்த பணநிரம்பலானது 2000 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பணநிரம்பல் வகைப்பாடாகக் காணப்படுகிறது. இது இலங்கையில் வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பு வங்கிகளில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களும் இலங்கையின் பணநிரம்பலில் செல்வாக்குச் செலுத்தியதைத் தொடர்ந்து $M_{2b}$ உடன் இவற்றையும் உள்ளடக்கி $M_4$ என்ற அதிவிரிந்த பணநிரம்பலானது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியானது 1950 – 1980 வரை குறுகிய பணநிரம்பலைக் ($M_1$) கணிப்பிட்டு அதனைப் பயன்படுத்தியதோடு அதன் பின்னர் இதற்கு மேலதிகமாக விரிந்த பணநிரம்பலையும் ($M_2$), 1998 இல் இருந்து ஒன்றுதிரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பலையும் ($M_{2b}$) கணிப்பிட்டு பயன்படுத்தியுள்ளது. 2000 ஆம் ஆண்டிலிருந்து

அதிவிரிந்த பணநிரம்பலையும் ($M_4$) பயன்படுத்தி வருகிறது. தற்போது இவை அனைத்தும் பயன்பாட்டில் உள்ளன.

**பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள்**

ஒரு நாட்டின் பணநிரம்பலை பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. இக்காரணிகளில் மத்திய வங்கியின் சொத்துக்கள் பிரதான இடம் வகிக்கின்றன.

**1. மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களின் அளவு**

மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களாக அரசாங்கப் பிணைகள் காணப்படுகின்றன. உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கும் போது பணநிரம்பல் அதிகரிக்கிறது. மாறாக உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடையும் போது பணநிரம்பலானது குறைவடைகிறது.

அதாவது வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் மத்திய வங்கியிடம் இருந்து கடன் பெறுகின்றது. மத்திய வங்கியால் அரசுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் அளவு அதிகரிக்கும் போது அரச பிணைகளின் நிரம்பல் அதிகரித்து பணநிரம்பல் அதிகரிக்கிறது. மாறாக வழங்கப்படுகின்ற கொடுகடனின் அளவு குறையும் போது பணநிரம்பல் குறைகின்றது.

**2. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள்**

மத்திய வங்கிக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கும் போது பணநிரம்பல் அதிகரிக்கிறது. மாறாக இச்சொத்துக்கள் வீழ்ச்சியடையும் போது பணநிரம்பல்

வீழ்ச்சியடைகிறது. வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒதுக்கங்களாகப் பேணப்படலாம். SDR, EURO, US எனப் பல்வேறு வடிவங்களில் சர்வதேச நாடுகளில் காணப்படலாம். சென்மதி நிலுவை மிகை நிலையடையும் போது ஒதுக்கங்களின் அளவு அதிகரிக்கிறது. இது பணநிரம்பலை அதிகரிக்கிறது. மாறாக சென்மதி நிலுவை பற்றாக்குறையாகக் காணப்படும் போது ஒதுக்கங்களின் அளவு குறைவடைகிறது. இது பணநிரம்பலை குறைவடையச் செய்யலாம்.

இருப்பினும் இவை நிச்சயமாக நிகழுமா? என்பது தீர்மானிக்கும் ஏனைய காரணிகளில் தங்கியுள்ளது.

**3. உள்நாட்டில் காணப்படும் கடன்கள்**

உள்நாட்டில் வர்த்தக வங்கிகள் தனியார் துறைக்கு கடன் வழங்கும் போது பணவாக்கம் ஏற்பட்டு பணநிரம்பல் அதிகரிக்கிறது. மாறாக தனியார் துறைக்கு கடன் கட்டுப்படுத்தப்படும் போது பணவாக்கம் குறைந்து பணநிரம்பல் குறைகின்றது. இதே போன்று அரசாங்கம் வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் பெறும் போது பணநிரம்பல் அதிகரிக்கிறது. மாறாக கடன் பெறும் அளவு குறையும் போது பணநிரம்பல் குறைகின்றது.

**4. அரசின் கையிருப்பிலுள்ள காசு இருப்பின் அளவு**

அரசின் காசுக் கையிருப்பு மட்டம் அதிகரிக்கும் போது மத்திய வங்கி சட்டப் பணத்தை வெளியீடு செய்ய வேண்டிய தேவை இருக்காது. இது பணநிரம்பல் ஏற்படுகின்ற அதிகரிப்பை கட்டுப்படுத்துகிறது.. மாறாக காசுக் கையிருப்பு மட்டம் குறைவடையும் போது சட்டப் பண வெளியீட்டை அதிகரிப்பதனூடாக பணநிரம்பல் அதிகரிக்கின்றது.

**5. பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டம் மூலாதாரம்.**

அரசாங்கம், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிக்கும் போது அப் பற்றாக் குறையை நிதியீட்டம் செய்வதற்காக கடன்பெறும் மூலகங்களினூடாகவும் பணநிரம்பலானது அதிகரிக்கிறது.

6. **மத்திய வங்கியினால் வர்த்தக வங்கி மீது மேற்கொள்ளப்படும் கடன் கட்டுப்பாடுகள்**

மத்திய வங்கியானது வர்த்தக வங்கி மீது கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கையாளும் போது வணிக வங்கிகளின் கடனாக்கம் குறைந்து பணநிரம்பலானது குறைவடையும். மாறாகக் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தளர்த்தும் போது வணிக வங்கிகளின் கடனாக்கம் அதிகரித்து பணநிரம்பலானது அதிகரிக்கும்.

**7. சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை**

**சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை**

சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையானது பணநிரம்பலில் செல்வாக்குச் செலுத்துகிறது. இருப்பினும் குறித்த நாட்டின் நாணயமாற்று வீத ஒழுங்குமுறைக்கு ஏற்ப செல்வாக்கின் தன்மை வேறுபடும்.

**பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற விளைவுகள்**

இலங்கையில் சட்டப்பணத்தை வெளியிடும் அதிகாரமுள்ள தலையாய நிதிநிறுவனமான இலங்கை மத்தியவங்கி விரிவாக்க விளைவு கொண்ட நாணயக் கொள்ளையை (Expansion Monitory

Policy) கடைப்பிடிக்கின்ற போது அதன் காரணமாக நாட்டின் பணநிரம்பலானது அதிகரிக்கிறது.

மேலும் அரசாங்கத்திடம் காசுக்கையிருப்பு மட்டம் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் மத்தியவங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்களை பிணையாகக் கொண்டு நம்பிக்கை நாணயத்தை வெளியிடும் போதும், பாதீட்டுப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக பணவீக்கத்தில் விரிவுத் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய உள்நாட்டு வங்கித்துறை சார்ந்த மூலகங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிசார் கடன்களைப் பெறும் போதும் மற்றும் மத்தியவங்கியின் சட்டப் பண வெளியீட்டின் அளவு அதிகரிக்கும் போதும் நாட்டின் பணநிரம்பலானது அதிகரிக்கலாம்.

இவ்வாறு பணநிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கியானது விரிவாக்க விளைவுகொண்ட நாணயக் கொள்கையை பின்பற்றும் போது அதன் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற பணநிரம்பல் அதிகரிப்பானது ஒரு பொருளாதாரத்தில் குறுங்காலரீதியிலும் நீண்டகால அடிப்படையிலும் பல சாதகமான பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

ஒரு நாட்டில் பணநிரம்பலானது அதிகரிக்கும் போது பணக்கேள்வி மாறாத நிலையில் வட்டிவீதமானது வீழ்ச்சியடையும். இவ்வாறு பணநிரம்பல் அதிகரிப்பதனால் வட்டிவீதத்தில் ஏற்படுகின்ற வீழ்ச்சியானது பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற குறுங்கால விளைவாகக் காணப்படுகிறது. இவ்வட்டிவீத வீழ்ச்சி தனியார் துறையினரின் முதலீட்டுக்கான செலவைக் குறைப்பதனால் தனியார் துறையினரின் முதலீட்டைத் தூண்டுகிறது. இதனால் பொருளாதாரத்தில் தனியார் துறையினரின் முதலீடுகள் அதிகரிக்கும்.

இவ் முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு மொத்தக் கேள்வியை அதிகரித்து உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பை அதிகரிக்கலாம்.

இவ்வாறு பணக்கேள்வி மாறாத நிலையில் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பினால் வட்டிவீதம் வீழ்ச்சியடைகின்ற தன்மையை (பணநிரம்பல் அதிகரிப்பதன் குறுங்கால விளைவு) பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.

வரைபடம் 02: பணநிரம்பல் அதிகரிப்பதன் குறுங்கால விளைவு




பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு பொருளாதார முயற்சிகளில் தனியார் துறையை முதலீடு செய்யத் தூண்டுவதனூடாக நாட்டில் மூல வளங்களில் பயன்பாடு அதிகரிக்கிறது. இதனால் பொருளாதாரத்தில் வெளியீட்டு மட்டம் அதிகரிக்கும். அதாவது ஒரு நாட்டின் பணநிரம்பலானது அதிகரிக்கும் போது அதேயளவால் நாட்டின் பெயரளவு வெளியீட்டு மட்டம் (Nominal output) அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அதிகரிக்கும். இது

பணநிரம்பல் அதிகரிப்பினால் குறுங்காலத்தில் ஏற்படுகின்ற சாதகமான விளைவாகக் காணப்படுகிறது.

இவ்வாறு பணநிரம்பல் ஏற்படுகின்ற அதிகரிப்பு உற்பத்தியை அல்லது நிரம்பலை அதிகரிக்கச் செய்யுமாயின் இதனால் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்து மக்களுடைய வருமான மட்டம் அதிகரிப்பதோடு அவர்களுடைய கொள்வனவாற்றல் அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும். அதுமட்டுமல்லாமல் பணநிரம்பல் அதிகரிப்பால் மக்களுடைய வருமான மட்டம் அதிகரிக்கும் போது அவர்களுடைய சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும். இதனால் பொருளாதாரத்தில் சேமிப்பும் அதிகரிக்கும்.

அதுமட்டுமல்லாமல் இப்பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு உற்பத்தியாளரின் இலாபத்தையும் அதிகரிக்கின்றது. அதாவது பணநிரம்பல் அதிகரிக்கும் போது மக்களுடைய வருமான மட்டம் மற்றும் கொள்வனவாற்றல் அதிகரித்து பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்துவதால் பொருட்களின் விலைமட்டங்கள் உயர்வடைந்து உற்பத்தியாளர்களின் உற்பத்தி ஆர்வத்தை அதிகரிக்கிறது. இவ்வாறு பொருட்களின் விலை மட்டங்கள் உயரும் போது அதே விகிதாசாரத்தில் இருப்புக்களின் அளவும் அதிகரிக்கும். இதனூடாக உற்பத்தியாளர்களின் வருமானம் அதிகரிக்கும். எனவே பணநிரம்பல் அதிகரிப்பால் பொருட்கள் சேவைகளின் விலை மட்டங்கள் உயர்வடைந்து பணவீக்கம் ஏற்பட்டாலும் அது உற்பத்தியாளருக்கு கிடைக்கின்ற இலாபத்தை அதிகரிக்கச் செய்கிறது.

மேலும் பணவீக்கத்தின் போது பொருட்களின் விலை அதிகரிப்பதைப் போன்று மூலப்பொருட்கள் மற்றும் உள்ளீடுகளின் விலைகள் உடனடியாக அதிகரிக்கும் எனக் கூறமுடியாது. இதனால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவு குறைவடையும். எனவே உற்பத்தியாளர்களின் இலாபம் அதிகரிக்கிறது. மேலும் வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் அதிக இலாபம் உழைப்பதால் அரசின் வரிவருமானம் அதிகரிக்கும்.

மேலும் பணநிரம்பல் அதிகரிப்பதனால் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி உயர்வடைந்து பொதுவிலைமட்டம் அதிகரித்து பணவீக்கம் ஏற்பட்டாலும், இப்பணவீக்கத்தினால் பொருளாதாரத்தில் சாதகமான விளைவுகளும் ஏற்படும். இவ்விளைவுகளும் பணநிரம்பல் அதிகரிப்பதன் சாதகமான விளைவுகளுள் ஒரு பகுதியாகக் காணப்படுகிறது. இப்பணநிரம்பல் அதிகரிப்பால் நீண்டகாலத்தில் பொதுவிலைமட்டம் உயர்வடைந்து பணவீக்கம் ஏற்பட்டாலும் இது கடன்பெற்றோருக்கு சாதகமாக அமைகிறது. இதனால் கடன்பட்டோர் நன்மை அடைவர். அதாவது பணவீக்க காலங்களில் பணத்தின் பெறுமதியானது தொடர்ந்து வீழ்ச்சியடைவதனால் கடன்பட்டோரின் கடன்சுமையானது குறைக்கப்படுகிறது.

மேலும் குறுங்காலத்தில் பணக்கேள்வி மாறாத நிலையில் பணநிரம்பல் அதிகரித்து வட்டி வீதம் வீழ்ச்சியடைவதனால் தனியார் துறையினரின் முதலீடுகள் அதிகரிக்கும். இதனால் பொருளாதாரத்தில் உற்பத்தி (GDP) அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கிறது. மேலும், பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு செயலிழந்து இருக்கும் பொருளாதார முயற்சிகளை சிறப்பாகச் செயலாற்றத் தூண்டுகிறது. மற்றும் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பொருளாதாரத்தை உறுதிப்படுத்துகின்றது.

இது குறுங்காலத்தில் பணக்கேள்வி மாறாத நிலையில் பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற சாதகமான விளைவுகளாகக் காணப்படுகின்றன.

இங்கு குறுங்காலம் (Short run) எனப்படுவது பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பொதுவிலைமட்ட அதிகரிப்பில் தாக்கம் செலுத்துவதற்கு முன்னுள்ள காலமாகும். இது குறுங்காலத்தில் பணநிரம்பல் அதிகரிக்கும் போது பொதுவிலை மட்டம் மாறாமல் நிலையாகக் காணப்படும் என எடுகோள் கொள்ளப்படுகிறது. எனவே பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற குறுங்கால விளைவு பற்றி நோக்கின் அது பணக்கேள்வி மாறாத நிலையில் பணநிரம்பல் அதிகரித்து வட்டிவீத வீழ்ச்சியினால் ஏற்படுகின்ற சாதகமான விளைவுகளை மேற்கண்டவாறு குறித்து நிற்கிறது.

மாறாக பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பொதுவிலைமட்ட அதிகரிப்பை ஏற்படுத்துமாயின் அது பணநிரம்பலில் அதிகரிப்பால் ஏற்படுகின்ற நீண்டகால விளைவாகக் காணப்படும் (Money supply and Long-run prices). பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியில் மட்டும் அதிகரிப்பை ஏற்படுத்தும் அதேவேளை பொருட்கள் செவைகளின் உற்பத்தியில் அல்லது நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தாது இருப்பின் நாட்டில் பணவீக்கம் ஏற்படும். அதாவது பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் தனியார் துறையினரின் நுகர்வு ஆற்றல் அதிகரிப்பதால் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும். ஆனால் பொருட்கள் சேவைகளின் நிரம்பல் மாறாத போது வெறுமனே கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு அப்பொருட்கள் சேவைகளுக்கான விலையை அதிகரிக்கும். இவ்விலை அதிகரிப்பு பணவீக்கத்தை ஏற்படுத்தும். இதுவே நீண்டகாலத்தில் பணநிரம்பல்

அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற முக்கியமான பாதக விளைவாகும். பாதகமான பொருளாதார விளைவுகள் அனைத்தும் பணநிரம்பல் அதிகரிப்பதனால் (நீண்டகாலத்தில்) ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளாகக் காணப்படும்.

அந்த வகையில் பணநிரம்பல் அதிகரிப்பு பணவீக்கத்தை ஏற்படுத்துமாயின் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரித்து மக்களின் மெய்வருமானம் அதாவது பண வுருமானத்தைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு குறைவடைந்து மக்களுடைய நுகர்வு ஆற்றல் ஆற்றல் பாதிக்கப்படும். இதனால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும்.

இப்பணவீக்கத்தினால் பணத்தின் உள்நாட்டுப் பெறுமதியும் வீழ்ச்சியடையும். அதாவது பணநிரம்பில் ஏற்படுகின்ற அதிகரிப்பு காரணமாக உள்நாட்டில் பணவீக்கம் ஏற்படும் போது பணத்தின் உள்நாட்டுப் பெறுமதி தேய்வடைவதோடு பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதியான வெளிநாட்டு நாணயமாற்று வீதமும் தேய்வடையும். இதனால் பொருளாதாரம் உறுதியற்றுக் காணப்படும்.

மேலும் பணநிரம்பல் அதிகரிப்பதால் ஒரு நாட்டில் பணவீக்கம் ஏற்படும் போது அது நிலையான வருமானம் உழைப்போருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் நிலையான சம்பளம் உழைக்கின்ற மக்களான அரசாங்க ஊழியர்கள் கெடுதியை அனுபவிப்பர். அதாவது பணவீக்க காலங்களில் பொருட்கள் சேவைகளின் விலைமட்டம் அதிகரிப்பதனால் மக்களுடைய வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கிறது. இருந்தபோதிலும் அதற்கேற்ப நிலையான வருமானம் உழைக்கின்றவர்களின் சம்பளமட்டம் அதிகரிப்பதில்லை. இதனால் சம்பள அதிகரிப்பு

அற்ற நிலையில் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பானது அவர்களுடைய கொள்வனவாற்றலை குறைவடையச் செய்வதால் அவர்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும். ஓய்வூதியம் பெறுவோர், வாடகை பெறுவோருக்கும் இது தீங்காக அமையும்.

மேலும் பணநிரம்பல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற பணவீக்கத்தால் விவசாயத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவர். அதாவது அவர்களின் கூலிகளும் விலைமட்ட அதிகரிப்புக்கேற்ப உடனடியாக அதிகரிக்கப்படுவதில்லை. இதனால் அவர்களின் கொள்வனவு சக்தி குறைவடைந்து அவர்களுடைய வாழ்க்கைத்தரம் குறைவடைவதால் அவர்களிடையே வறுமை நிலை அதிகரிக்கும்.

மேலும் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் பணவீக்கம் ஏற்படும் போது அது மக்களிடையே வருமான செல்வப்பகிர்வில் ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தும். அதாவது நிலையான வருமானம் பெறுகின்ற நடுத்தர வறிய மக்களின் கொள்வனவு ஆற்றல் குறைந்து அதனூடாக அவர்கள் பாதிக்கப்படுவர். மாறாக வர்த்தகர்கள் அதிக இலாபம் உழைப்பர். எனவே பணவீக்கமானது வறியவர்களை மேலும் வறிய நிலைக்கும் பணக்காரரை மேலும் மேலும் உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்கிறது.

மற்றும் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் பணவீக்கம் ஏற்படும் போது அது கடன் கொடுத்தோருக்கு தீமையாக அமையும். அதாவது பணவீக்க காலங்களில் பணத்தின் பெறுமதியானது தொடர்ந்து வீழ்ச்சியடைவதால் கடன் கொடுத்தோர் அதேயளவான பணத்தினை கடன்பட்டோரிடமிருந்து மீளப்பெற்றாலும் அதன் பெறுமதியானது பணவீக்க காலங்களில் குறைவடைந்து காணப்படுவதனால் கடன் கொடுத்தோருக்கு தீமையாக அமையும்.

மேலும் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் பணவீக்கம் ஏற்படும் போது அது சென்மதிநிலுவைப் பிரச்சினையை தோற்றுவிக்கும். அதாவது ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரிப்பதனால் நாட்டின் சென்மதி நிலுவை பாதிக்கப்படும். பணவீக்கம் காரணமாக வெளிநாட்டுப் பொருட்களின் விலைகளை விட பணவீக்கத்தினால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலை அதிகமாகக் காணப்படும் போது இறக்குமதி அதிகரிப்பதுடன் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி குறைவடைந்து ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையும். எனவே இந்நிலை சென்மதி நிலுவையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் நீண்டகாலத்தில் பணத்துக்கான கேள்வி அதிகரித்து பொதுவிலைமட்டம் உயர்ந்து பணவீக்கம் ஏற்படும் போது அது மக்களுடைய வாழ்க்கைச் செலவை அதிகரிக்கும். இதனால் மக்களுடைய சேமிப்பு குறைவடையும். அதாவது நாட்டில் உயர்ந்தமட்ட பணவீக்கம் நிலவும் போது மெய்வட்டிவீதம் எதிர்க்கணியமாக காணப்படும். அதாவது பணவட்டிவீதத்தைவிட பணவீக்கவீதம் உயர்வாகக் காணப்படும் போது மக்கள் தமது பணத்தினை சேமிக்க விரும்பமாட்டார்கள். இதனால் உயர்ந்த மட்ட பணவீக்கமானது பொருளாதாரத்தில் சேமிப்பு முதலீடுகளை பாதிக்கும்.

மேலும் பணநிரம்பல் அதிகரிப்பால் உயர்ந்த மட்ட பணவீக்கம் ஏற்படும் போது நாட்டு மக்களுக்கு உள்நாட்டுப் பணத்தின் மீதுள்ள நம்பிக்கை அற்றுப் போகும். மேலும் பணவீக்கத்தின் விளைவாக பணத்தின் உள்நாட்டுப் பெறுமதி தொடர்ந்து தேய்வடைவதால் மக்கள் பணத்தை பணமாக வைத்திருக்க விரும்பாது தங்கநகை, நிலம் போன்ற நிலையான சொத்துக்களில் முதலீடு செய்வர்.

இதனால் பொருளாதாரத்தில் தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யாத முறையற்ற முதலீடுகள் அதிகரித்து பொருளாதார செயற்றிறனின்மை உருவாகும். மேலும் பணநிரம்பல் அதிகரிப்பால் பணவீக்கம் ஏற்படும் போது துறைக்குத் துறை வேறுபாடு நிலவுவதால் பொருளாதார செயற்றிறனின்மை அதிகரிக்கும்.

மேலும் ஒரு நாட்டின் பணநிரம்பல் அதிகரிப்பு பணவீக்கத்தை ஏற்படுகின்றமையால் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற இவ் ஒட்டுமொத்த பாதகமான விளைவுகளும் சேர்ந்து நாட்டின் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை சீர்குலைக்கும். இதனால் நீண்ட காலத்தில் பணநிரம்பல் அதிகரிப்பதனால் பணவீக்கம் ஏற்படும் போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி பாதிக்கப்படுவதோடு பொருளாதார உறுதிப்பாடும் சீர்குலையும்.

மேலும் ஒரு நாட்டில் பணநிரம்பலானது தொடர்ந்து அதிகரிக்கும் போது வட்டிவீதம் வீழ்ச்சியடைவதனால் இது திரவபொறிநிலைக்கு (Liquidty trap) இட்டுச் செல்லலாம். திரவப்பொறிநிலை என்பது பணச்சந்தையில் வட்டிவீதமானது ஆகக் குறைந்த நிலையில் காணப்படும் போது பணத்துக்கான கேள்வியானது உயர்ந்த மட்டத்தில் எல்லையற்றதாகவும் முடிவிலியாகவும் காணப்படுவதைக் குறித்து நிற்கிறது. இது பொருளாதாரத்தில் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பிணைகள், முறிகள் போன்ற நிதிச்சந்தை ஆவணங்கள், நிதிச்சொத்துக்கள் மீது மக்கள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

இவ்வாறு ஒரு நாட்டின் பணநிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது குறுங்காலத்திலும், நீண்டகாலத்திலும் பல சாதகமான, பாதகமான விளைவுகளை தோற்றுவிக்கும். இருப்பினும் இப்பணநிரம்பலில்

ஏற்படுகின்ற அதிகரிப்பின் போது பொருட்கள் சேவைகளின் நிரம்பல் அதிகரிக்காது, கேள்வியில் மட்டும் அதிகரிப்பு எற்பட்டு பணவீக்கம் எற்படும் போதே பணநிரம்பல் அதிகரிப்பால் நீண்டகாலத்தில் பாதகமான விளைவுகள் தோன்றுகின்றன. இப்பணநிரம்பல் அதிகரிப்பால் பணவீக்கம் ஏற்பட்டு எமது நாட்டின் பேரினப் பொருளாதார உறுதிப்பாடு பாதிக்கப்படும் போதே இலங்கை மத்திய வங்கி மிகவும் இறுக்கமான நாணயக்கொள்கையை கடைப்பிடித்து பணநிரம்பலைக் கட்டுப்படுத்தி பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்த முனைகிறது.

***உசாத்துணை***


*சந்திரசேகரம். செ., (2004), போருளியல் -2, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ் பல்கலைக்கழகம், பக்கம்: (12 – 16).*

*பரமேஸ்வரன். வி, (2014), "பொருளியல்", KSK.Com Publication, கொழும்பு-10, பக்கம்: (25 –35).*

*https://www.investopedia.com/terms/m/moneysupply.asp*

*https://www.economicshelp.org/blog/1143/economics/increasing-money-supply/*

## பேராசிரியர் மில்ரன் பிறீட்மன் (1912 – 2006)



அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பொருளியலாளரான மில்டன் பிறீட்மன் 1976 பொருளியலுக்கான நோபல் பரிசினைப் பெற்றுக் கொண்டவர். இவர் 1912 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி நியுயோர்க் நகரில் குடியேறிய யூதர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் ரட்சர்ஸ் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டு தனது உயர் கல்வியைத் தொடர்ந்ததோடு தனது 21வது வயதில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் இணைந்து கொண்டு தனது முதுகலைமாணிப் பட்டத்தினை 1933இல் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1946 ஆம் ஆண்டு தனது கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். பொருளியல் துறைக்கு இவர் ஆற்றிய சேவைகள் பலவாகும். இவர் 1976ஆம் ஆண்டு பொருளியலுக்கான நோபல் பரிசினை நுகர்வுப் பகுப்பாய்வு (consumption analysis), பணவியல் கோட்பாடு (Monetary Theory) தொடர்பாக இவர் ஆற்றிய சாதனைகளுக்காகக் கிடைக்கப்பெற்றது. இவர் தனது காலத்தில், ஜனாதிபதி றிசாட் நிக்சனுக்கு பொருளாதார ஆலோசனையாளராகவும், 1967 ஆம் ஆண்டு அமெரிக்க பொருளாதார சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றினார். இவர் 1977ஆம் ஆண்டு சிக்காக்கோ பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஸ்ரான்போர்ட் பலகலைக்கழகத்தின் Hoover நிறுவனத்தின் முத்த ஆராய்ச்சியாளரானார்.

இவரால் முன்வைக்கப்பட்ட பணத்திற்கான கேள்வி பற்றிய பணக்கணியக் கோட்பாடானது கெயின்சின் பணக்கணியக் கோட்பாட்டின் மறுசீரமைக்கப்பட்ட ஆராய்ச்சியாக (A restatement theory of the quantity theory of money) வெளிவந்தது. சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பணப் பொருளியலாளரான மில்டன் பிறைட்மனின் கருத்தானது பழம் பொருளியலாளரான கெயின்சின் கருத்திலிருந்து சில அம்சங்களால் வேறுபடுகிறது. இருப்பினும் மில்டன் பிறைட்மனை தலைமையாகக் கொண்ட சிக்காக்கோ பல்கலைக்கழக பணவியலாளர்கள் பொருளாதாரத்தில் பணம் முக்கியமானது என்றும் மொத்தக் கேள்வியை முகாமைசெய்வதில் பணநிரம்பல் கணிசமான பங்கை கொண்டிருக்கிறது என்றும் கூறுகின்றனர். மில்ரன் பிறீட்மன், தனது காலத்தில் பொருளியல்துறைக்கு கோட்பாடுகளை நிறுவியும், பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் புத்தகங்களை எழுதியும் பல்வேறுபட்டவகையில் அளப்பரிய பங்கினையாற்றியிருந்தார்.

# இறைக்கொள்கையும் அதன் நோக்கங்களும் ஓர் குறுகிய பார்வை

எஸ். தர்சினி, க. கஜேந்தினி[2]
விரிவுரையாளர் (தகதிகாண்), பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பேரினப்பொருளாதார முகாமைத்துவத்தின் போது எடுக்கப்படும் பேரினப் பொருளாதார கொள்கைகளில் ஒன்றாகவே **இறைக்கொள்கை** காணப்படுகின்றது. அதாவது நிறைதொழில் மட்டம், சமூக நியாயத்துவம், பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தல், சென்மதி நிலுவை சமநிலை, நிலைத்திருக்கும் அபிவிருத்தி ஆகிய பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் பேரினப் பொருளாதார கொள்கைகள் முகாமைப்படுத்தப்படுகின்றன.

''அரசாங்க வருமானம் மற்றும் செலவினை செயற்படுத்துவதன் மூலம் பேரினப் பொருளாதா மாறிகளில் பாதிப்பினை ஏற்படுத்தல் **அரச இறைக்கொள்கை**'' எனப்படும். **Fiscal Policy** என்ற ஆங்கிலப்பதத்தில் **''Fisc''** என்பது **நிதி, நிதிப்பயன்பாடு** போன்ற அர்த்தங்களைக் குறிக்கின்றது. **''Policy''** என்பது **கொள்கை** என்ற அர்த்தத்தை தருகின்றது. பேரினப் பொருளாதார குறிக்கோள்களை அடைவதற்காக அரச வருமானம், அரச செலவு, பொதுப்படுகடன் அல்லது நிதியீட்டம் ஆகிய கருவிகளை பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்துவதனை இது குறிக்கும். எனவே **அரச வருமானம்**, **அரச செலவு**, **அரசாங்கக்கடன்** என்பன அரச நிதிக்கொள்கையை செயற்படுத்தும் பிரதான கருவிகள் ஆகும்.

அரச நிதிக்கொள்கை மூலம் மொத்தக் கேள்விக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதன் காரணமாக பணக்கொள்கையைப் போலவே அரச நிதிக் கொள்கையும் **கேள்வி முகாமைக் கொள்கை** என அழைக்கப்படுகிறது.

கெயின்ஸின், ‘‘வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடுகள்’’ என்ற நூல் வெளிவந்த பிறகு முக்கியத்துவம் பெற்றுத் திகழும் நிதிக்கொள்கைக்கு பொருளியலறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை கொடுத்துள்ளனர். Dcoh Gerharm ‘‘அரசின் செலவு, வருவாய், கடன் நிர்வாகம் பற்றியும், அவற்றின் நடவடிக்கையால் சாதனங்களின் பகிர்வு, நிதிகளின் ஓட்டம் ஆகியவற்றில் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அவற்றின் மூலம் வருவாய், விலைகள், வேலைவாய்ப்பு, உற்பத்தி நிலைகள் பற்றியும் தொடர்புடையதே நிதிக்கொள்கை’’ என்கிறார். Arthur Smithie, ‘‘தேசிய வருவாய், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் விரும்புகின்ற விளைவுகளை ஏற்படுத்தவும் விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்கவும் ஏற்றவகையில் அரசு தனது செலவுகளையும் வருவாய் திட்டங்களையும் பயன்படுத்துவது தொடர்பான கொள்கை’’என்கிறார்.

Culbertion, ‘‘நிதிக்கொள்கை என்பதன் மூலம் நாம் சாதாரணமாக அரசின் நிகர வரவினங்கள், பற்றாக்குறைக்கென அளிக்கின்ற அதனுடைய செலவுகளையும், பாதிக்கின்ற அரசின் நடவடிககைகளைக் குறுக்கின்றது’’ என்கிறார். பேராசிரியர் Otto Ecksteian, ‘‘குறுகிய கால நோக்கங்களான வேலைவாய்ப்பு, விலைமட்ட நிலைப்படுத்துதல் ஆகியவற்றை அடைய

வரிகளிலும் செலவுகளிலும் செய்யும் மாற்றங்கள்" என்று நிதிக்கொள்கை பற்றிக் கூறுகிறார்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் அரசின் நடவடிக்கைகள் குறைந்த அளவில் இருக்க வேண்டுமென்பதையும், வரவு செலவுத்திட்டம் சமநிலையில் இருக்க வேண்டுமென்பதையும் பொருத்தமான நிதிக்கொள்கையாகக் கொண்டிருந்தனர். ஆனால் தொன்மைப் பொறியியலறிஞர்களின் நிதிக் கொள்கைக் கருத்தில் பேரிடியாக 1930 இல் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் அமைந்தது. இந்நிலையில் கெயின்ஸ் தனது புகழ் பெற்ற **"வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு"**, என்ற நூலின் மூலம் தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்தைத் தகர்த்துப் புதுப் பொருளாதாரக்கருத்தை உருவாக்கினார்.

பொதுவாக இறைக்கொள்கையானது அரச நிகழ்ச்சியில் ஏற்படும் மாற்றம், செலவுமட்டம், வரிக்கட்டமைப்பு மற்றும் பேரினப்பொருளாதர கொள்கைகளான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வருமான சமத்துவம், பொருளாதார வளர்ச்சிப்பாதையில் உறுதியினை எற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின் பொருட்டு கடன் பெறுதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அனைத்து கருத்துக்களையும் தொகுத்து நோக்கும் போது அரசபாதீட்டின் மூலமும், பொதுநிதி நடவடிக்கைகள் மூலமும் பேரினப்பொருளாதார குறிக்கோள்களின் வாயிலாக பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ள அரசு மேற்கொள்கின்ற அனைத்து

நிதிப்பணிகளையும் இறைக்கொள்கை எனக்குறிப்பிட முடியும். இவ்வாறு இறைக்கொள்கை என்றால் என்ன என்பதற்கான விளக்கங்களை நோக்க முடியும்.

அடுத்ததாக **இறைக்கொள்கையின் நோக்கங்களை** பின்வருமாறு குறிப்பிடலாம். முதலில் எதிர்பார்க்கப்படுவது அரசாங்கத்தின் செலவை ஈடுசெய்வதற்கு அவசியமான மூல வளங்களை ஒன்று திரட்டுவதாகும் (Resource Mobilisation). இது தொடர்பாக வலு, தொலைத் தொடர்பு சேவைகள், புகையிரதப் பாதைகள், நெடுஞ்சாலைகள், நீர் விநியோகம், விமான நிலைய அபிவிருத்தி மற்றும் துறைமுக நடவடிக்கைகள் போன்ற அரசாங்கத்தின் பொதுவான பணிகளுக்கும், அதே போல கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பண்களுக்கும் என மூல வளங்களை ஒன்று திரட்டுவது அவசியமாகும். இதற்கென அரசாங்கம் வரிகளையும் வரிகள் அல்லாத ஏனைய மூலங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இரண்டாவதாக, வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதும் அரசிறைக் கொள்கையின் குறிக்கோளாக உள்ளது. இந்த விடயத்தில் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதற்கு அவசியமான வரிச்சலுகைகளும், வரி விடுமுறைகளும் அளிப்பதற்கென வரிக்கொள்கையை பயன்படுத்த முடியும்.

மூன்றாவதாக, பொருளாதாரமொன்றில் வருமானப் பகிர்வினை மேற்கொள்வதற்கும் அரசிரைறக் கொள்கையைப் பயன்படுத்த முடியும். அதாவது, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடுவது அல்லது வருமானம் உயர்ந்து செல்லும்

பொழுது வரி வீதத்தை அதிகரிப்பது, ஆட்கள் வைத்திருக்கும் தானியங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவை மீது வரி விதிப்பது, ஆடம்பரப் பொருட்களுக்கு உயர்ந்த வீதத்தில் வரி விதிப்பது மற்றும் பொது மக்கள் உபயோகிக்கும் பண்டங்களுக்கு வரி விலக்களிப்பது அல்லது வரியைக் குறைப்பது என்பவற்றுக்கூடாக வருமானப் பகிர்வில் ஏற்றத்தாழ்வினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இந்த குறிக்கோள்களை நோக்கும் பொழுது அரசிறைக் கொள்கை அரச நிதி இயலில் மிக முக்கியமான ஓர் இடத்தை பெற்றிருப்பதைக் காண முடிகிறது. மேலும் அரசிறைக் கொள்கைக்குள் அரச வரிக் கொள்கையும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொள்கிறது.

பொருளாதாரமொன்றின் வரி சேகரிப்பு, செலவுகள், கடன் எடுத்தல்கள் மற்றும் அரச படுகடன் முகாமை என்பவற்றுடன் சம்மந்தப்பட்ட அரச பொருளாதாரக் கொள்கையின் ஒரு பாகமாக இருந்து வரவு செலவுத்திட்டங்கள், நிதி நிர்வாகம் ஆகியவற்றையும் அவற்றால் உற்பத்தி, பகிர்வு, வருவாய், விலை, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஏற்படும் விளைவுகளையும் குறிப்பதாக இறைக் கொள்கை காணப்படுகின்றது.

இதன் நோக்கங்கள் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் சில பொதுவானவற்றைக் குறிப்பிடலாம். அந்தவகையில் முழுநிறைவான வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதையும் பொருளாதாரத்தில் நிலையான போக்கை உருவாக்குவதையும் இவ் இறைக் கொள்கையின் தலையாய நோக்காக குறிப்பிடுகின்றனர். 1930 களில் ஏற்பட்ட உலகப்

பெருமந்தத்திற்கு முன்னர் பொது விலையை ஒரு நிலைப்படுத்துவதையே பொருளாதார நிலைமைப்படுத்துவதென்று குறிப்பிட்டனர். இப்பெருமந்தத்தின் கொடுமையான வேலையின்மையைப் போக்குவதே இறைக் கொள்கையின் நோக்கமாக இருந்தது.

முழுநிறைவான வேலை வாய்ப்பை ஏற்படுத்தல், விலையை நிலைப்படுத்தல் ஆகிய இரண்டு நோக்கங்களையும் அடைய ஒரே நேரத்தில் முயல வேண்டும். இத்தகைய நிதிக் கொள்கையின் நோக்கங்களை கால அடிப்படையில் குறுங்கால நோக்கங்கள், நீண்ட கால நோக்கங்கள் என இரண்டாகப் பாகுபடுத்துகின்றனர். இக்கொள்கையின் நோக்கங்கள் சாஸ்திரீய, புதிய சாஸ்திரீய மற்றும் கெயின்சிய வாதிகளின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றது.

அந்தவகையில் இறைக் கொள்கையின் நீண்டகால நோக்கங்களாக பொருளாதார வளர்ச்சியையும், முழு நிறைவான வேலை வாய்ப்பினையும் குறிப்பிடலாம். பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானமான மெய்ப் பெறுமானம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதைக் குறிக்கின்றது. கெயின்ஸ் குறிப்பிடுகையில் நாட்டின் உற்பத்தியிலும் வருவாயிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பொதுச் செலவு, வரி விதிப்பின் பங்கை அறிந்து பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும், நிலைப்படுத்தவும் வேண்டும் என கூறுகின்றார். இதற்காக அரசு சில வகை வரிகளின் மூலம் நுகர்வைக் கட்டுப்படுத்தி சேமிப்பு, முதலீட்டைக் கூட்டலாம், வரிவிதிப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு வழி

வகுக்கலாம். அத்துடன் பொதுச் செலவு தேவையைக் கூட்டி பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதாகும்.

முழுநிறைவான வேலைவாய்ப்பு என்கின்றபோது ஊழியம் (தொழிலாளர்) முழுதாக வேலைவாய்ப்பைப் பெற்று இருக்கும் நிலையையே கருதுகின்றது. பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் யாவும் பூரணமாக பயன்படுத்தப்படும் ஓர் நிலையாகும். வேலையில்லாப் பிரச்சினையைக் குறைப்பதற்கு மொத்தத் தேவையிலுள்ள பற்றாக் குறையைப் போக்கவேண்டும். இதனை அரசு பொதுச் செலவின் மூலம் ஈடு செய்யலாம். தனியாரின் நுகர்வுச் செலவும், முதலீடும் குறைகின்ற பொழுது அரசு முன் வந்து பணத்தைச் செலவிட்டால் உற்பத்தியும் வேலை வாய்ப்பும் குறையாது என கெயின்ஸ் குறிப்பிடுகின்றார். இத்தகைய நிலையினை இறைக் கொள்கையானது மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக நீண்டகால நோக்கங்கள் காணப்படுகின்றன.

இறைக் கொள்கையின் குறுகிய கால நோக்கங்களாக வாணிபச் சூழலை நீக்குதல், உயர்நிலை வேலை வாய்ப்பை ஏற்படுத்தல், விலையை நிலைப்படுத்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். நாட்டின் வாணிபச் சூழல் செயற்படுகின்ற பொழுது மந்த நிலையிலிருந்து பொருளாதாரத்தை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்கு பொதுப் பணிச் செலவுகளை மேற் கொள்ளலாம் எனவும் பொதுப் பணிச் செலவுகளை மேற் கொள்வதிலும், உடனடியாக அவற்றை செயல்படுத்துவதிலும், எவற்றிற்கு முதலில் செலவிடுவது என்பதிலும், தொடங்கிய பணியை இடையில் நிறுத்த இயலாமலிருப்பதும் சிக்கல்கள் தோன்றுகின்றன. சமுதாயத்துயர் போக்கும் பணிகள் மந்த

காலத்தில் பொருளாதாரத்தை நிலை நிறுத்தத்துணை செய்கின்றன. இவை அரசுக்கு செலவாக இருந்தாலும் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவது கடமையாக இருப்பதனால் இதுவும் அவசியமாகின்றது.

பொருளாதாரத்தில் ஏற்படும் வாணிபச் சூழல்கள் போன்ற ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்த்து பொருளாதாரத்தை நிலைப்படுத்த மேற்கூறியவாறு ''சுழல் மாற்று நிதிக் கொள்கையை'' பயன்படுத்தும் போது எவ்வாறு செயற்படுகின்றது என்பதை நோக்கலாம். விலையை நிலைப்படுத்துவதன் மூலமும் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவது இறைக் கொள்கையின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

இதற்காக அரசு ''ஈடுகட்டும் நிதி'' மற்றும் ''விலையாற்றும் நிதி'' மூலம் பொருளாதாராத்தை நிலைப்படுத்துகின்றது. பற்றாக்குறை நிதியாக்கம் மூலமும் எச்சவரவு-செலவுத்திட்டம் போன்ற முறைகளின் மூலமும் தான் பொருளாதாரத்தை நிலைப்படுத்த முடியும். பணவீக்கக் காலத்தில் எச்ச வரவு- செலவுத்திட்டத்தின் மூலம் மொத்தச் செலவைக் குறைத்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலையை நிலைப்படுத்தும் நோக்கத்தினை அடைய முடியும். மற்றும் மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கை குறைவதனால் வேலை வாய்ப்பும் வருவாயும் குறைவடைகின்றது. விலைக்குறைவினால் தனியாரின் முதலீடு சுருங்கும், பொருட்களின் தேவை நடப்பு உற்பத்தியை விட குறைவாக இருப்பதனால் வளத்திற்கு இடையில் வறுமை நிலை தோன்றும். இதனை நிவர்த்தி செய்வது இறைக் கொள்கையின் நோக்கமாகக் காணப்படுகிறது. மேற்கூறியவாறான

இறைக்கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்ற திறைசேரி உண்டியல்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான அரச நிதிக்கொள்கைக் கருவிகளைப் பயன்படுத்தி பேரினப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுகின்ற போது பல பிரச்சனைகள் ஏற்படும். கடன் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் வேதனங்கள் அதிகரிப்பதனால் பணவீக்கம் ஏற்படல் மற்றும் அதன் மூலம் விலை உறுதி என்ற நோக்கத்தை அடைந்து கொள்வது கடினமானதாகும்.

வரிச்சலுகைகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்துவதற்கு முயற்சிக்கும் போது அந்த நோக்கம் நிறைவேறினாலும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவருத்திக்குப் பாதிப்பு ஏற்படுத்தும்.

இவ்வாறு அரச நிதிக் கொள்கையைப் பயன்படுத்தி பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவது கடினமான காரியமாக இருப்பதற்குக் காரணம் அவற்றின் நோக்கங்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றமையாகும்.

இப்பிரச்கனைகளை குறைக்கின்ற வகையில் அரசநிதிக் கொள்கையைச் செயற்படுத்தல் வேண்டும்.

***உசாத்துணை***

*குருசாமி, மா, பா., (1978). பொதுநிதி, வண்ணன் வெளியீடு. பக்கம் (314–330).*

*குருசாமி,மா.பா, (2005). பேரியல் பொருளாதாரம். வண்ணன் வெளியீடு, பக்கம் (238-255).*

*வின்சன்ட் மர்வின் பெர்னான்டோ, (1995) பொருளியல் நோக்கு(மாணவர் பொருளியல்). பக்கம் (26 – 30, 51 – 52).*

*வின்சன்ட் மர்வின் பெர்னான்டோ, (1994) பொருளியல் நோக்கு. பக்கம் (24– 34).*

*Santhirasegaram, S., (2000). An Introduction to Macro Economics, Association of Nava poruliyalakam, page (8 -12).*




**Source: Central Bank Report, Sri Lanka (2017)**

| இலங்கையின் வேலைவாய்ப்புக்களில் துறைசார் பங்களிப்பு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | விவசாயம் | கைத்தொழில் | சேவைகள் |
| 1950 | 46 | 17 | 37 |
| 1955 | 45 | 17 | 38 |
| 1960 | 38 | 17 | 45 |
| 1965 | 34 | 17 | 49 |
| 1970 | 28 | 24 | 48 |
| 1975 | 30 | 27 | 43 |
| 1977 | 31 | 28 | 41 |
| 1978 | 31 | 27 | 42 |
| 1980 | 28 | 29 | 43 |
| 1985 | 28 | 26 | 46 |
| 1990 | 26 | 26 | 48 |
| 1996 | 22 | 27 | 51 |
| 1997 | 22 | 27 | 51 |
| 1998 | 21 | 28 | 51 |
| 1999 | 21 | 27 | 52 |
| 2000 | 20 | 27 | 53 |
| 2001 | 20 | 27 | 53 |
| 2002 | 21 | 26 | 53 |
| 2003 | 19 | 26 | 55 |
| 2004 | 18 | 27 | 55 |
| 2005 | 17 | 27 | 56 |
| 2006 | 17 | 27 | 56 |
| 2007 | 31.3 | 26.6 | 42.1 |
| 2008 | 32.7 | 26.3 | 41.2 |
| 2009 | 32.6 | 25.1 | 42.3 |
| 2010 | 32.7 | 24.2 | 43.1 |
| 2011 | 32.9 | 24.3 | 42.8 |
| 2012 | 31 | 26.1 | 42.9 |
| 2013 | 29.7 | 26.2 | 44.1 |
| 2014 | 28.5 | 26.5 | 45 |
| 2015 | 28.2 | 26 | 45.8 |
| 2016 | 27.1 | 26.4 | 46.5 |
| 2017 | 26.1 | 28.4 | 45.5 |

**Source: Various Central Bank Reports, Sri Lanka**

# தேசிய வருமான கணக்குகளின் பயன்களும் வரையறைகளும்

கதிரேசன் பௌரணி
தற்காலிக விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

தற்போதைய கால கட்டத்தில் எல்லா நாடுகளும் தேசிய கணக்குகளைத் தயாரித்து பிரசுரம் செய்வதைக் காணமுடிகிறது. அத்தோடு உலகில் பெரும்பாலான நாடுகள் தேசிய கணக்குகளைத் தயாரிக்கும்போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கீகரித்த முறையில் தயாரிக்கின்றன. தேசிய கணக்குகளிலிருந்து பெறப்படும் தகவல்கள் ஒரு நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்திற்கு அத்தியவசியமான ஒன்றாக இருப்பதனால் நாடுகள் தேசிய கணக்குகளிற்கு முக்கியத்துவமளித்துத் தயாரித்து வருகின்றன.

தேசியக்கணக்கீடானது, உற்பத்தி முறை, வருமான முறை, செலவு முறை என்னும் மூன்று விதமான முறைகளைப் பயன்படுத்தி தேசிய வருமான கணக்குகள் தயாரிக்கப்படுவதனால், முழுப் பொருளாதாரக் கட்டமைப்பின் செயலாற்றம் நடத்தை என்பவற்றைப் புரிந்துகொள்வதற்கு இக்கணக்குகளிலிருந்து வெளிவரும் தரவுகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

உற்பத்தி, வருமானம், செலவு ஆகிய மூன்று முறைகளிலும் தயார் செய்யப்படும் தேசிய கணக்குத் தரவுகள் மொத்தப் பொருளாதாரத்தின் பருமன், அதன் நீண்டகால விருத்தி, குறுங்கால ஏற்ற இறக்கம் என்பவற்றைச் சரியாக இனங்காணல்,

பேரினப் பொருளாதாரக்கொள்கை தயாரித்துக்கொள்ளல், அவற்றின் செயற்சாதனையை மதிப்பிடல் என்பவற்றுக்கு மிகுந்த பயனுடையதாகும்.

எந்தளவுக்குச் சரியாக உற்பத்தி, வருமானம், செலவு என்பவை கணிக்கப்பட்டன என்பதன் அடிப்படையில் இத்தரவுகளின் பயன்பாடு அமைந்திருக்கும். அதேபோன்று சில அம்சங்கள் தொடர்பில் இத்தரவுகளின் திட்டம் முழுமைத்தன்மை தொடர்பில் சவால்கள் காணப்படுகின்றன.

**தேசிய வருமானம்**

குறித்த வருடத்திற்குள் குறித்த நாட்டு மக்கள் உற்பத்திச் செயற்பாடுகளில் பங்குகொண்டு உழைத்த காரணி வருமானங்களின் மொத்த தேசிய வருமானம் எனப்படும். இது வேலைவாய்ப்பு வருமானம், தேறிய வட்டி, கம்பனி இலாபம், சுயதொழில், உயர்தொழில் வருமானம், வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் என்பவற்றை உள்ளடக்கும். காரணிச்செலவு என மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்திப் பெறுமானத்தில் மூலதனத்திற்கான தேய்வை நீக்கி தேசிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தேசிய வருமான கணக்குகளின் பயன்கள்**

1. பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல்.

நிலையான விலையில் மதீப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்தத் தேசிய உற’பத்தி பற்றிய தரவுகளை அடிப்படையாக கொண்டு காலப்போக்கில் பொருளாதார வளர்ச்சியினை அறிந்துக்கொள்ள முடியும்.

பொருளாதார வளர்ச்சியின் வேகம், வர்த்தக சகட ஓட்டத்தை இனங்காண்பதற்கு மிக முக்கிய தரவாக அமைகின்றது. வர்த்தக சகட ஓட்டம் என்பது காலத்துடன' மெய்வருமானத்தில் காட'டப்படும் சுழல் முறையான நடத்தையாகும்.

பொருளாதாரத்தின் மந்தம், செழிப்பு என்பவற்றை இனங்காண்பதற்கும் அதனடிப்படையில் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கவதற்கும் இத்தரவுகள் பயன்படுகின்றன.

2. வாழ்க்கைத் தரத்தையும் சமூகநல சாதனையின் அபிவிருத்தியையும் அளவிடுதல்.

சனத்தொகையின் வளர்ச்சி வேகத்துடன் ஒப்பிட்டு மெய் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் படி உண்மையாகவே வாழ்க்கைத்தரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிக்க முடியும்.

3. பொருளாதாரக் கட்டமைப்பை விளக்குதல்.

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை புரிந்துக்கொள்வதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறை ரீதியான கட்டமைப்பு பெருமளவில் உதவியாகும்.

4. வருமானப் பரம்பலின் தன்மையை இனங்காணுதல்.

மொத்த உற்பத்தியை மேற்கொள்ளும் போது வெவ்வேறு உற்பத்தி வளங்கள் பங'களிப்புச் செய்கின்றன. அவ்வாறு பங்களிக்கும் உற்பத்தக் காரணிகளுக்கிடையில் தேசிய

வருமானம் பிரிபட்டுச் செல்லும் முறையை தேசிய வருமானத் தரவுகள் காட்டுகின்றன.

5. பொருளாதாரத் துறைகளுக்கு இடையிலான தொடர்புகளை இனங்காண முடியும்.

பொருளாதாரத் துறைகளை வணிகத்துறை, வீட்டுத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை என பிரதான செயற்பாட்டு அலகுகளாகப் பிரிக்க முடியும். அந்த ஒவ்வொரு பொருளாதார அலகுகளும் ஏனைய பொருளாதார அலகுகளுடன் எவ்வாறு தொடர்பினை ஏற்படுத்தி வருகின்றன பற்றிய விளக்கத்தினை பெற’றுக்கொள்ள முடியும்.

வருமானம், செலவு, உற்பத்திப் பாய்ச்சல்களின் மூலம் இதனை இணங்கான முடியும்.

6. வளப்பயன்பாட்டை இனங்காணுதல்.

குறித்த நாடு உற்பத்தி மூலமாகவும் இறக்குமதி மூலமாகவும் பெற்றுக்கொள்ளும் முழுமையான வளத்தின் அளவு நுகர்வு, முதலீடு, ஏற்றுமதி எனப் பயன்படுத்தப்படும் முறைகளை இத்தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

மொத்த வருமானத்தில் எந்த அளவு நுகரப்படுகிறது, எவ்வளவு சேமிக்கப்படுகிறது. நுகர்வுக்கும் சேமிப்புக்கும் இடையிலான இடைவெளி என்பவற்றை இத்தரவுகள் வெளிப்படுத்தும்.

7. பொருளாதார முகாமைத்துவம்.

பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பொருளாதாரத்தை முறையாக முகாமை செய்வதில் தேசியக்கணக்கு தரவுகள் பாரிய பங்காற்றுகின்றன.

தேசியக்கணக்குகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் அடிப்படையிலேயே அரச நிதிக்கொள்கைகள் மற்றும் பணக்கொள்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

8. பொருளாதார போக்கினை அறிந்துக்கொள்ளல்.

பொருளாதார போக்கினை பற்றி அறிந்துக்கொள்வதற்கு தேசிய வருமானக் கணக்குகள் உதவுகின்றன.

பொருளாதாரமானது முன்னோக்கியா அல்லது சரிந்துக்கொண்டா அல்லது நிலையானதாகவா காணப்படுகின்றதா என்பதனை பற்றி அறிந்துக்கொள்ள தேசியக்கணக்கீடானது பாரிய பங்காற்றுகின்றது.

அதுமட்டுமின்றி பொருளாதார வளர்ச்சி விகிதம் பற்றியும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

**தேசிய கணக்குகளின் வரையறைகள்**

1. பொருளாதாரத்தில் நிகழும் எல்லாப் பயனுடைய செயற்பாடுகளும் தேசிய கணக்குகள் மூலமாக வெளிப்படுத்தப்படாமை.

சந்தை செயற்பாடுகளுக்கட்படாத பயனுடைய பல பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக, வீட்டுத்துறை இல்லத்தரசிகளால் நிறைவேற்றப்படும் சேவையின் பெறுமதி மொத்த உற்பத்தி கணிப்பில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களால் வீட்டுத் துறைக்காக நிறைவேற்றப்படும் பல பயனுள்ள செயற்பாடுகள் (உதாரணமாக, வீட்டில் திருத்தங்கள் செய்தல்) தேசிய கணக்குத் தயாரிப்பில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

மேலும் பிழைப்பூதியப் பொருளாதாரத்தில் சந்தைக்கு வராத பயனுடைய பல பொருளாதாரக் கருமங்கள் காணப்படுகின்றன. அத்தகைய பொருளாதாரச் செயற்பாடுகள் சந்தைக்கு வராததால் அவற்றின் பெறுமதி சரியாக தேசிய வருமானக்கணக்குகளில் சேராமல் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

முறைசாரா பொருளாதாரத்தில் நிகளும் பயனுடைய பொருளாதாரச் செயற்பாடுகள் உற்பத்திக்குக் கொடுக்கும் பங்களிப்ப தேசியக் கணக்குகளில் சரியாக வெளிப்படுத்தப்படுவதில்லை. அரசு அற்கீகரியாத, கட்டுப்பாடுகள் இல்லாத, பாதுகாப்புக்கிடையாத ஏழை மக்கள் ஈடுபடும் பொருளாதாரச் செயற்பாடுகளே முறைசாரா பொருளாதாரச் செயற்பாடுகள் எனப்படுகின்றன.

2. ஓய்வுகாலம் தேசிய உற்பத்தியில் சேராமை.

ஏனைய பொருள்கள் சேவைகள் போல ஓய்வெடுத்தலும் ஒரு பொருளாதாரச் செயற்பாடாகும். வேலை செய்யாது ஓய்வு பெறுவதால் அடையும் திருப்தியின் பெறுமானம் தேசிய உற்பத்தியில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. இதனை

வாழ்க்கைத்தரத்தினை வெளிப்படுத்தும் சுட்டியாக தேசியக்கணக்கைப் பயன்படுத்துவதில் காணப்படும் அடிப்படையான வரையறையாக கருத முடியும்.

3. உற்பத்திச் செயற்பாடுகளின்போது சுற்றுச் சூழல் வளங்களுக்கு ஏற்படும் தீங்கு கருத்தில் கொள்ளப்படாமை.
4. தேசிய உற்பத்தியைக் கணிக்கும் போது உற்பத்தி நடவடிக்கைகளினால் உருவாகும் பொருள்கள் சேவைகளின் பெறுமதி மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால் உற்பத்திச் செயற்பாடுகளின் பொது பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் அதே வேளை சூழலுக்குத் தீங்கும் நிகழ்வதுண்டு. இவ்வாறான உற்பத்திச் செயற்பாடுகளின்போது சுற்றுச் சூழல் வளங்களுக்கு ஏற்படும் தீங்கு தேசியக்கணக்கை தயாரிப்பதில் கருத்தில் கொள்ளப்படாமை.

5. அரச கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி வருமானம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

தனிப்பட்ட வணிகத்துறை பெற்றுக்கொள்ளும் கடனுக்கான வட்டிச் செலத்தல்கள் வருமானமாகக் கருதப்பட்டு தேசியக்கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற போதிலும் அரசு பெற்றுக்கொள்ளும் கடனுக்காக செலுத்தப்படும் வட்டி வருமானமாக கரதப்படுவதில்லை.

***உசாத்துணை***


*Atapattu.D, (2010)  Introduction to Economics*

*http://www.economicsdiscussion.net/national-income/limitations-national-income/9-major-limitations-of-national-income-accounts/12680*

*http://www.knowledgiate.com/advantages-measuring-national-income/*


**இலங்கையின் வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தின் போக்கு**




Source: World Bank Database

<table>
<tr><th colspan="4">இலங்கையில் வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தின் போக்கு</th></tr>
<tr><th>ஆண்டு</th><th>வெளிநாட்டு நாணய மாற்று வீதம்</th><th>ஆண்டு</th><th>வெளிநாட்டு நாணய மாற்று வீதம்</th></tr>
<tr><td>1970</td><td>6.0</td><td>2001</td><td>89.4</td></tr>
<tr><td>1971</td><td>5.9</td><td>2002</td><td>95.7</td></tr>
<tr><td>1972</td><td>6.0</td><td>2003</td><td>96.5</td></tr>
<tr><td>1973</td><td>6.4</td><td>2004</td><td>101.2</td></tr>
<tr><td>1974</td><td>6.7</td><td>2005</td><td>100.5</td></tr>
<tr><td>1975</td><td>7.0</td><td>2006</td><td>103.9</td></tr>
<tr><td>1976</td><td>8.4</td><td>2007</td><td>110.6</td></tr>
<tr><td>1977</td><td>8.9</td><td>2008</td><td>108.3</td></tr>
<tr><td>1978</td><td>15.6</td><td>2009</td><td>114.9</td></tr>
<tr><td>1979</td><td>15.6</td><td>2010</td><td>113.1</td></tr>
<tr><td>1980</td><td>16.5</td><td>2011</td><td>110.6</td></tr>
<tr><td>1981</td><td>19.2</td><td>2012</td><td>127.6</td></tr>
<tr><td>1982</td><td>20.8</td><td>2013</td><td>129.1</td></tr>
<tr><td>1983</td><td>23.5</td><td>2014</td><td>130.6</td></tr>
<tr><td>1984</td><td>25.4</td><td>2015</td><td>135.9</td></tr>
<tr><td>1985</td><td>27.2</td><td>2016</td><td>145.6</td></tr>
<tr><td>1986</td><td>28.0</td><td>2017</td><td>152.4</td></tr>
<tr><td>1987</td><td>29.4</td><td colspan="2" rowspan="9">இலங்கையில் அண்மைக்காலமாக பணத்தின் பெறுமதியானது அமெரிக்க டொலருக்கு எதிராக மிகவும் மோசமாக தேய்வடைந்து கொண்டு செல்கின்ற நிலையை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் நாணயமாற்று வீதமானது 1970 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பாரியளவால் தளம்பலடைந்து கொண்டு செல்கிறது. இதனை இவ்வட்டவணை 1970 ஆம் ஆண்டிலிருந்து விளக்கி நிற்கிறது.</td></tr>
<tr><td>1988</td><td>31.8</td></tr>
<tr><td>1989</td><td>36.0</td></tr>
<tr><td>1990</td><td>40.1</td></tr>
<tr><td>1991</td><td>41.4</td></tr>
<tr><td>1992</td><td>43.8</td></tr>
<tr><td>1993</td><td>48.3</td></tr>
<tr><td>1994</td><td>49.4</td></tr>
<tr><td>1995</td><td>51.3</td></tr>
</table>

**Source: Source: World Bank Database**

# இலங்கை மத்திய வங்கி (Central Bank of Sri Lanka)

**க.சுகன்யா**
தற்காலிக விரிவுரையாளர், முகாத்துவத் துறை,
வர்த்தக முகாமைத்துவபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

1949 ஆம் ஆண்டின் 58ம் இலக்க சட்டத்தினால் இயற்றப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச் சபையே மத்திய வங்கியாகும். பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அதை மேம்படுத்துவதற்காகவும் தீவிரமான நாணயக் கொள்கை மற்றும் வலுவான நிதியியல் துறையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்திலும் சுதந்திரத்திற்கு பின்பு அமைந்த அரசால் இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்டது. மத்திய வங்கி நிறுவப்படுவதற்கு முன்னர்இ மத்திய வங்கித் தொழில் தொடர்பான தொழிற்பாடுகள்இ 1884 ஆம் ஆண்டில் 32 ஆம் இலக்க கடதாசிப் பணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பணச் சபை முறைமையினால் மேற்கொள்ளப்பட்டன.

## இலங்கை மத்திய வங்கியினது குறிக்கோள்கள் அல்லது நோக்கங்கள்.

பொருளாதார சூழ் நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப, மத்திய வங்கி அமைக்கப்பட்டதிலிருந்து அதன் பார்வையும் தொழிற்பாடுகளும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. மத்திய வங்கித் தொழில், அதன் குறிக்கோள்கள் என்பவற்றின் போக்குகளுக்கேற்ப, 2002 இல் நாணயச் சட்ட விதியில் திருத்தத்தினை ஏற்படுத்தி மத்திய வங்கி ஓர் ஒழுங்குமுறைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் இரு மையக் குறிக்கோள்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு
- நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

**பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு**

இதில் குறிப்பாக உள்நாட்டு விலைமட்ட உறுதியை ஏற்படுத்தல் முக்கிய குறிக்கோளாகும். அதாவது குறைந்த பணவீக்க நிலை உறுதிப்பாட்டை பேணுவதற்கு நாணயக்கொள்கை வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றது. இதன் பொருட்டு பண அடித்தளத்தையும் பண நிரம்பலையும் கையாளும் கருவிகளாக மத்திய வங்கியினது வங்கிவீதம், நியதி ஒதுக்கு வீதம் மற்றும் தாராள சந்தை என்பவற்றையும் பயன்படுத்துகின்றது.

**நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு**

இது நிதியியல் முறைமையின் உறுதியான தொழிற்பாடுகளும் (நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சந்தைகள்) வங்கித்தொழில், நாணய மற்றும் சென்மதி நிலுவை கொடுப்பனவு என்பவற்றின் நெருக்கடிகளற்ற தன்மையையும் குறித்து நிற்கும்.

நிதியியல் உறுதியின்மைக்கு

- வங்கிகள் முறிவடைகின்றமை.
- சொத்துக்களின் விலைகளில் அதிகளவிலான ஏற்ற இறக்கங்கள்.

- சந்தையின் திரவத்தன்மை தகர்ந்து போகின்றமை/கொடுப்பனவுகளுக்கு ஏற்படும் தளம்பல்கள் என்பன காரணமாக அமைகின்றன.

நிதியியல் உறுதிப்பாட்டிற்கு

- உறுதியான பேரண்ட பொருளாதார சூழல்
- உறுதியான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு
- நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிதியியல் சந்தைகள்
- வலுவான நிதியியல் நிறுவனங்கள்
- பாதுகாப்பானதும் வலுவானதுமான கொடுப்பனவு உட்கட்டமைப்பு என்பன அவசியமாகும்.

சந்தைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களைக் கண்காணித்தல், கொடுப்பனவு முறைமைகளை மேற்பார்வையிடல் மற்றும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணல் போன்றவை நிதியியல் உறுதியைப் பேணுவதற்கு மிகவும் அவசியமாகும்.

மத்திய வங்கியானது தனது குறிக்கோள்களை அடையும் நோக்குடன் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

### 1. மையத் தொழிற்பாடுகள் (Core Functions)

- நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்
- செலாவணி வீத கொள்கையினை நடைமுறைப்படுத்தல்
- இலங்கையின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல்
- நாணயங்களை வெளியிடுதலும் விநியோகித்தலும், இலங்கையில் சட்ட ரீதியாகவுள்ள நாணயத்தாள்களையும்

நாணயக் குத்திகளையும் வெளியிடுவதற்கு மத்திய வங்கி பிரத்தியேக உரிமைகளைக் கொண்டிருக்கிறது.

- வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் அரச பிணயங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் ஆகியோருக்கு உரிமம் வழங்கல் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நிதியியல் நிறுவனங்களுக்கு(வர்த்தக வங்கிகள் மற்றம் முதனிலை வணிகர்கள்) தீர்ப்பனவு மற்றும் மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கு உடமைகள் போன்றவற்றிற்கான ஏற்பாடுகள்.

### 2. முகவராண்மைத் தொழிற்பாடுகள் (Agency Function)

- பொதுப்படுகடனின் முகாமைத்துவம்
- வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்
- பேரண்ட நிதி மற்றும் கிராமிய கொடுகடன் திட்டங்களின் உச்ச முகவராண்மையாகத் தொழிற்படுகின்றமை.
- ஊழிய சேமலாப நிதியத்தின் முகாமைத்துவமும் நிருவாகமும்

### அரசின் வங்கி எனும் வகையில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- அரசின் பொருளாதார நிதி ஆலோசகராக விளங்குதல்
- அரச நிதி கொடுக்கல் வாங்கல்களை பரிசீலித்தலும் அரச நிறுவனங்களின் கணக்குகளை பரிசோதனை செய்தலும், அவற்றுக்கு வங்கித் தொழில் வசதிகளை வழங்குதலும்

- அரசிற்குத் தேவையான போது கடன் வழங்குதல். உதாரணம்: பாதீட்டுப் பற்றாக்குறைக்கு கடன் வழங்குதல்
- அரசிற்குத் தேவையான கடன்களை வேறு மூலாதாரங்களிலிருந்து பெற்றுக் கொடுத்தல். உதாரணம்: திறைசேரி உண்டியல்களை வெளியீடு செய்தலும் அவற்றின் விற்பனவுகளில் ஈடுபடலும்.
- அரசின் சார்பில் வெளிநாட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடல்/அரசின் முகவராக தொழிற்படல் (IMF, உலக வங்கிஇ வெளிநாட்டு அரசாங்கங்கள் ஆகியவற்றுடனான நடவடிக்கைகளில் அரசை பிரதிநிதித்துவப்படுத்தல்).

- அரசு பொதுக்கடனை முகாமைப்படுத்தல் மத்திய வங்கியானது அரசின் சார்பில் பொதுப் படுகடனை வழங்குவதற்கு தீர்ப்பனவ செய்வதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

**வங்கிகளின் வங்கி எனும் வகையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

1. மத்திய வங்கியானது நடைமுறைக்கணக்கு வசதிகளை வணிக வங்கிகளுக்கு வழங்குவதுடன் வணிக வங்கிகளின் வாடிக்கையாளர்களின் வைப்பில் ஒரு குறிப்பிட்ட வீதத்ததை ஒதுக்காக ஏற்று வணிக வங்கிகளின் பேரில் வைப்பு செய்தல்.
2. வணிக வங்கிகளுக்கு தேவையான போது கடன் வழங்குதல்
3. இறுதிக் கடன் ஈவோனாக தொழிற்படல்

4. வணிக வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைக்கின்ற ஒரு தீர்வகமாகத் தொழிற்படல்
5. வணிக வங்கிகளுக்குத் தேவையான போது ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குதல்
6. வணிக வங்கிகளுக்கு கொடுகடன் உத்தரவாத வசதிகளை/மீள் நிதியிடல் வசதிகளை வழங்குதல்
7. வணிக வங்கிகளின் நிதி நடவடிக்கைகளை பரிசீலனை செய்தல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை ஏற்படுத்தல், நிதியியல் முறைமையில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தல் ஆகிய மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் நிரம்பல், வட்டிவீதம் கடன் பெறும் வசதி ஆகியவற்றைப் பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துகின்றது. அவையாவன

**கடன் கட்டுப்பாட்டு முறைகள்**

1. தொகைக்கடன் கட்டுப்பாட்டுமுறை/ அளவுக்கடன் கட்டுப்பாட்டுமுறை/ மரபு ரீதியான கட்டுப்பாட்டுமுறை
2. தெரிவுகடன்/ பண்பு ரீதியான கட்டுப்பாட்டுமுறை

அவற்றுள் தொகைக் கடன் கட்டுப்பாட்டு கருவிகளாக

1. வங்கி வீதம் (Bank Rate)
2. காசு ஒதுக்கு வீதம் (Cash Reserve Ratio)
3. திறந்த சந்தை நடவடிக்கை (Open Market Operations)

ஆகியவற்றையும் தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளாக

1. குறிப்பிட்ட சில துறைகளுக்கு விஷேட வட்டி வீதங்களில் கடன் வழங்குதல்
2. கடன் முதிர்ச்சி எல்லையை மாற்றியமைத்தல்
3. கடன்களுக்காக வைக்கப்படும் பிணைகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகளை மேற்கொள்ளல்
4. தெரிவு செய்த சில துறைகளுக்கான மீள்நிதியிடல் வசதிகளை மாற்றியமைத்தல்
5. தெரிவு செய்த துறைகளுக்கான வழங்கக்கூடிய கடனின் உச்ச அளவை நிர்ணயித்தல்.
   (உதாரணம்: நுகர்வுக்கான கடன் கட்டுப்பாடு)
6. வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்
7. ஆலோசனை அறிவுறுத்தல்களை வழங்குதலும் ஒழுக்க இணங்குவிப்பும் ஆகிய கருவிகளையும் பயன்படுத்துகிறது.

அட்டவணை 01: இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகம் மற்றும் அலுவலகங்களின் தொழிற்பாட்டுப் பிரதேசங்கள்.

| | மாகாணம் | ஆண்டு & இடம் |
|---|---|---|
| 1 வது | தென் மாகாணம் | 1981 மாத்தறை |
| 2 வது | வடமத்திய மாகாணம் | 1982 அநுராதபுரம் |
| 3 வது | மத்திய மாகாணம | 1985 மாத்தளை |
| 4 வது | வடமாகாணம் | 2010 (July) யாழ்ப்பாணம் |
| 5 வது | கிழக்கு மாகாணம | 2010 (November) திருகோணமலை |
| 6 வது | வடமாகாணம் | 2015 கிளிநொச்சி |
| 7 வது | மத்திய மாகாணம் | 2016 நுவரெலியா |

* எனினும் யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாண அலுவலகம் 2017 இல் இருந்து கிளிநொச்சியில் உள்ள மாகாண அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டுவருகின்றது.

***உசாத்துணை***


*https://www.cbsl.gov.lk/en/about/about-the-bank/functions*

*https://en.wikipedia.org/wiki/Central_Bank_of_Sri_Lanka*

*https://www.cbsl.gov.lk/en/monetary-policy/about-monetary-policyeps*

*https://www.cbsl.gov.lk/en/about/about-the-bank/objectives*


**Poverty Headcount Ratio (per cent)**

| Sector | 2002 | 2006/07 | 2009/10 | 2012/13 | 2016 |
|---|---|---|---|---|---|
| Sri Lanka | 22.7 | 15.2 | 8.9 | 6.7 | 4.1 |
| Urban | 7.9 | 6.7 | 5.3 | 2.1 | 1.9 |
| Rural | 24.7 | 15.7 | 9.4 | 7.6 | 4.3 |
| Estate | 30.0 | 32.0 | 11.4 | 10.9 | 8.8 |

**Source: Central Bank Report, Sri Lanka (2017)**

## சிற்றினப் பொருளியல் எண்ணக்கருக்கள்

ச.சியாளினி
உதவி விரிவுரையாளர், பொருளியல் கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

- **முதலாளித்துவ பொருளாதாரம்:** சந்தைப் பொறிமுறையுடன் தனியார் சொத்துரிமையும் தனியார் முயற்சியாண்மையும் காணப்படும் பொருளாதாரமே முதலாளித்துவ பொருளாதாரமாகும்.

- **கட்டளைப் பொருளாதாரம்:** அரச சொத்துடைமை, அரச முயற்சியாண்மை என்பனவற்றோடு உற்பத்தி பங்கீடு, விலை நிர்ணயம் உட்பட சகல நடவடிக்கைகளும் அரசினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார அமைப்பே கட்டளைப் பொருளாதாரம் ஆகும்.

- **கலப்புப் பொருளாதாரம்:** பொருளாதாரம் ஒன்றில் காணப்படுகின்ற உற்பத்தி, பங்கீடு, விலை நிர்ணயம் என்பனவற்றின் ஒரு பகுதி அரசதுறையினராலும் மறுபகுதி தனியார் துறையினராலும் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார அமைப்பே கலப்புப் பொருளாதாரமாகும்.

- **நிலைமாறும் பொருளாதாரம்:** மத்திய திட்டமிடல் முறைமையில் காணப்படுகின்ற அதிகளவிலான குறைபாடுகள் காரணமாக சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகள் அதிலிருந்து விலகி சந்தை முறைமையை நோக்கி மாற்றமடைவதைக் குறிக்கும்.

- **கேள்வி:** குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு நிலவக்கூடிய ஒரு விலையில் நுகர்வோரால் கொள்வனவு செய்யத் தயாராகவுள்ள தொகை கேள்வி எனப்படும்.

- **கேள்வி விதி:** குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த கேள்வியைத் தீர்மானிக்கின்ற ஏனைய புறக் காரணிகள் மாறாத நிலையில் குறித்த பொருளின் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படும் எனக் கூறுவதே கேள்வி விதியாகும்.

- **கேள்வித் தொகை மாற்றம்:** குறிப்பிட்ட காலப்பகுதியில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த கேள்வியைத் தீர்மானிக்கின்ற ஏனைய புறக் காரணிகள் மாறாத நிலையில் குறித்த பொருளின் விலையில் ஏற்படுகின்ற மாற்றத்தின் காரணமாக அப்பொருளின் கேள்வித் தொகையில் ஏற்படுகின்ற மாற்றம் கேள்வித் தொகை மாற்றம் எனப்படும்.

- **புறநடைக் கேள்வி:** குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த கேள்வியைத் தீர்மானிக்கின்ற ஏனைய புறக் காரணிகள் மாறாத போது குறிப்பிட்ட பொருளின் விலைக்கும் இதன் கேள்வித் தொகைக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுவதனை புறநடைக் கேள்வி குறிக்கும்.

- **கேள்வி மாற்றம்**: குறிப்பிட்ட காலப்பகுதியில் குறித்த பொருளின் விலை மாறாத போது அதன் கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகளில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் மாற்றம் காரணமாக குறித்த பொருளின் கேள்வி மாற்றமடைதல் கேள்வி மாற்றம் எனப்படும்.

- **நிரம்பல்:** குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறித்த ஒரு பொருளுக்கு நிலவக்கூடிய குறித்த ஒரு விலையில் வழங்குனரால் விற்பனை செய்யத் தயாராகவுள்ள தொகை நிரம்பல் எனப்படும்.

- **பொருளாதார மிகை:** சந்தைச் சமனிலையின் போது சமனிலை விலையில் பொருளொன்றைக் கொள்வனவு செய்வதாலும் விற்பனை செய்வதனாலும் நுகர்வோரும் உற்பத்தியாளரும் பெறும் மேலதிக நன்மைகள் பொருளாதார மிகை எனப்படும்.

- **நுகர்வோன் மிகை:** குறிப்பிட்ட பொருளை நுகர்வோன் கொள்வனவு செய்யத் தயாராக இருந்த விலைக்கும் அப்பொருளை உண்மையில் நுகாவோன் கொள்வனவு செய்த விலைக்கும் இடையிலான வித்தியாசம் நுகாவோன் மிகை எனப்படும்.

- **உற்பத்தியாளர் மிகை:** சந்தையொன்றில் குறிப்பிட்ட பொருளை உற்பத்தியாளன் விற்பனை செய்த விலைக்கும் அப்பொருளை விற்பனை செய்யத் தயாராகவிருந்த விலைக்கும் இடையிலான வித்தியாசம் உற்பத்தியாளர் மிகையாகும்.

- **உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை/ உச்ச விலை:** சந்தையொன்றில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சமனிலை விலையானது நுகர்வோரின் நலனை பாதிப்பதாக அமையும் போது நுகர்வோரின் நலன் பேணும் நோக்குடன் அரசினால் அமுல்ப்படுத்தப்படும் ஒரு கட்டுப்பாட்டு விலைத் திட்டம் உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாகும்.

- **தள விலை / குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை:** சந்தையொன்றில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சமனிலை விலையானது சிலவேளை உற்பத்தியாளரை அல்லது காரணி உரிமையாளரை பாதிப்பதாக அமையும் போது உற்பத்தியாளரின் அல்லது காரணி உரிமையாளரின் நலன் பேணும் நோக்குடன் சமனிலை விலைக்கு மேலாக அரசினால் அமுல்ப்படுத்தப்படும் ஒரு கட்டுப்பாட்டு விலைத் திட்டமே இதுவாகும்.

- **மாற்றல் கட்டணம்:** ஒரு உற்பத்திக் காரணி பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்காக வழங்கப்படுகின்ற குறைந்தபட்சக் கொடுப்பனவு இல்லது இழிவுக் கட்டணம் மாற்றல் கட்டணம் எனப்படும்.

- **சிக்கன வாடகை அல்லது பொருளாதார வாடகை:** ஒரு உற்பத்திக் காரணியை பொருளாதார நடவடிக்கை ஒன்றில் தொடர்ந்து ஈடுபடுவதற்காக வழங்கப்படுகின்ற மாற்றல் கட்டணத்தை விட மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளும் வருமானமே சிக்கன வாடகையாகும்.

- **பிரவேசச் சுதந்திரம்:** சந்தை ஒன்றினுள் நிறுவனங்கள் புதிதாக உள்ளே நுழைவதற்கும் சந்தையை விட்டு வெளியேறுவதற்கும் எந்தவித தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத நிலையே பிரவேசச் சுதந்திரமாகும்.

- **பிரவேசத் தடை:** சந்தை ஒன்றினுள் நிறுவனங்கள் புதிதாக உள்ளே நுழைவதற்கும் சந்தையை விட்டு வெளியேறுவதற்கும் இயற்கையாகவோ செயற்கையாகவோ காணப்படுகின்ற தடைகள் பிரவேசத் தடை எனப்படும்.

- **சந்தைத் தோல்வி:** விலைப் பொறிமுறையின் தோல்வியே சந்தைத் தோல்வியாகும். அதாவது விலைப் பொறிமுறையானது அருமையான வளங்களைத் திறமையாகவும் நியாயமாகவும் ஒதுக்கீடு செய்யத் தவறும் நிலையே சந்தைத் தோல்வியாகும்.

- **இழிவுக் கூலி நிர்ணயம்:** ஊழியச் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட சம்பள மட்டமானது ஊழியர்களைப் பொறுத்தவரையில் நியாயமாக இல்லாதவிடத்து சமனிலை சம்பள மட்டத்திற்கு மேலாக ஒரு சம்பள மட்டத்தை அரசு சட்டரீதியாக நிர்ணயித்தல் இழிவுக் கூலி நிர்ணயம் எனப்படும்.